"போற்றுபவர் போற்றட்டும்;—புழுதிவாரித்,
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொருகருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்: எவர் வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. காரியாலயம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 2—10—1954 | சனிக்கிழமை | இதழ் 14

தமிழகம் போற்றும் ... கவிமணி மறைந்தார்!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல கவிஞர்கள் தமிழகத்தில் தோன்றினார்கள். சிலர்தான் புகழ்பெற்றார்கள். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள், விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச்சிலரே. அந்த மிகச்சிலரில் பாரதி முன் நிற்கிறார்!

ஆண்டவனைப்பற்றியும் அரசர்களைப்பற்றியும் மட்டுமே கவிபாடிய கவிஞர்களையும் கவிதைகளையும் கண்டும் கேட்டும் சலிப்படைந்த தமிழ் மக்களிடையே மக்களைப்பற்றியும் மக்களின் சுக துக்கங்களைப் பற்றியும் பாடிய பாரதி முதலில் பெரும் புதிராக—ஆச்சரியக் குறியாகக் கருதப்பட்டார். அவர் கண்ட ஆசைக் கனவுகள்-எதிர்காலத்தைப் பற்றி அவருக்கிருந்த நம்பிக்கைகள் அத்தனையும் அவரை சிறந்த தீர்க்கதரிசனம் மிகுந்த மக்கள் கவிஞனாகக் கருதும்படிச் செய்து விட்டது. அவரது கவிதைகளில் சில என்றென்றும் போற்றிப் புகழத் தகுந்தவைகளாகி விட்டன.

இப்படிப்பட்ட கவிஞர்கள் வரிசையில் இரண்டாவதாகக் கருதப்படுபவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். பாரதிதாசன் கவிதைகளைப் பற்றி நாம் கூறத்தேவையில்லை. அவரது தெள்ளு தமிழ் பாக்களை மக்கள் போற்றி புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர் நம்மிடையே இருக்கிறார். அவரது கவிதைகள் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மூன்றாவதாகக் கருதப்படுபவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆவார். நம்மிடையே நமக்காக, நமது மொழியின்—நாட்டின் நலனுக்காக வாழ்ந்தார். ஐயகோ! நமது இதயத்திலே ஈட்டிகள் பாய்ந்தது போல அவர் காலமானார் என்ற செய்தி கேட்டு துடித்துப் போனோம். அவர் கட்சிகளைக் கடந்தவர். ஆனால் கடமையை மறவாமல் வாழ்ந்தார்.

அவரது கவிதைகள் நம்மை களிப்பூட்டி வாழவைக்கும் தன்மை பெற்றது. அவரது பெயர் தமிழ் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது. அவர் இறந்தாலும் வாழ்ந்துகொண்டிருப்பார்.

கவிமணி இளமையிலேயே கவிபாடும் திறம்பெற்றிருந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் கவிதை புனைந்தார். அதைப் படித்தார். மீண்டும் படித்தார். அவரே மகிழ்ந்தார். சிறந்த கவிதைதான் என்றாலும் பூரண திருப்தி இல்லை. தமிழறிந்த புலவர் யாராவது படித்து பாராட்டினால்தான் மன அமைதி ஏற்படும் என்று கருதினார். அந்தக் கவிதையை தனது வகுப்பில் தமிழ்ப் புலவர் மேஜை மீது யாரும் அறியாத படி வைத்துவிட்டார்.

வகுப்பில் நுழைந்து அமர்ந்தார் தமிழ்ப் புலவர். அவரது பார்வையில் அக்கவிதை! படித்தார். பிரமாதம்! பிரமாதம்! யார் எழுதியது இக்கவிதையை ?" வகுப்பில் கேட்டார். பதில் கிடையாது. பிறகு அப்புலவர் அவ்வகுப்பில் மாணவர்களிடம் அக்கவிதையின் சிறப்பினை விவரித்துப் புகழ்ந்தார். அப்போதும் கவிதை தனதென்று கூற முன்வரவே இல்லை. ஆனால், உள்ளம் குளிர்ந்தது! இப்படிப் பல சம்பவங்கள். கவிமணி பண்பாடு மிகுந்தவர்.

எண்பதாண்டுகள் வாழ்ந்தார். இன்று அவர் இல்லை. ஆனால், அவர் நமது இதயத்தில் இடம்பெற்று விட்டார், அவரது கவிதைகள் தமிழர் இல்லங்களில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

உணராதோ?

தமிழென்னுங் காவனத்தே
தண்மணத்தை வாழ்க்கையுடன்
கமழப்பெய் திட்ட ஒரு
கவிமணியே கலைமலரே!

பிள்ளைமொழிப் பாட்டினிலே
பேரிசையாழ் பண்ணிசைத்துத்
தெள்ளுதமிழ் யூட்டினையே
தேனாக இனிக்குதையா!

துரும்புமுதல் வாழ்க்கை வரை
தொகை தொகையாய் பாடித்தமிழ்
அருவியினில் இன்பத்தை
அகப்புளகச் செய்தனையே!

கவியழகு குறைவெனினும்
கடன்வாங்கும் கருத்தழகு
செவி நுகரும் கவிக்கனியாய்
சிந்தைக்கினி கினிக்குதையா!

"ஆசியத்தின் சோதி"யிலே
அன்புருவாய் நிற்கின்றாய்
விசோளிரும் "உமர்கயாமி"ல்
வாழ்க்கைவீணை மீட்டுகிறாய்!

"மலர் மாலை" சூட்டிதமிழ்
மாதாவை வணங்கியின்று
கலங்க எமை வைத்துவிட்டாய்
காலமுனை உணராதோ?

—ந. கோவேந்தன்

"காமராசர் திராவிடர் : அசல் தமிழர்" என்றெல்லாம் சில தோழர்கள் உணர்ச்சிப் பெருக்கிலும் அன்பு மிகுதியிலும் வாழ்த்துரை வழங்குவதுண்டு. காங்கிரஸ்காரர்கள் கூட, காமராசர் "அண்ணுத்துரையிடம் தனி அன்பு காட்டுகிருர்" என்றும், "பெரியாரைப் பிரியத்துக் குரியவராக்கக் கருதுகிருர்" என்றும் கூறி, சிலர் பெருமைப் படுவதும், சிலர் பொருமைப் படுவதுமாக இருக்கிருர்கள். காமராசர் நம்மிடம் சாய்ந்துவிட்டதாகவே எண்ணி எண்ணி, சமீபத்தில் காங்கிரஸிலிருந்து விலகிய சிலர் புழுங்குகிருர்கள். 'தினமணி'யார், காமராசர் நம்மை சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு விட்டதாக, கற்பனை செய்து சந்தோஷப்படுகிருர்.

ஆனுல்......

காமராசர் என்னவோ, "நடப்பதெல்லாம் நாராயணன் செயல்" என்பதுபோல மௌனமாக இருக்கிருர். அண்ணுத்துரை வாயைத் திறந்து, "காமராசரை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன்" என்று சொல்லமாட்டாரா என எதிர் பார்ப்பவர் போல் காமராசர் காணப்படுகிருர். அதற்காகவே ஜாடையாக, "எல்லோரும் ஒன்றுபட்டு கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டும்" என்று போகிற இடங்களிலெல்லாம் பேசுகிருர். ஆனுல் எப்படி ஒன்றுபடுவது என்கிற விளக்கம் தரயாட்டேன் என்கிருர். அண்ணு அங்கே போவதா, காமராசர் இங்கே வருவதா? ஒன்று படுவதாளுல் எப்படி? எந்த அடிப்படையில்?-இது விளக்கப்படவில்லை. நடக்கிற காரியங்களைப் பார்த்தால், சில அவசரக்காரர்களைப் போல அண்ணுவும் 'காமராசப் பிரசாரத்தில், இறங்க வேண்டும் என்கிற எண்ணந்தான் காமராசருக்கு இருக்கும் போலத் தெரிகிறது. இல்லையென்ருல், தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளைத் திரும்பப் பெறவும், கல்லக்குடி காட்சியளிக்க வசதி செய்வதுமாகிய காரியங்களைச் செய்யாமலிருப்பதற்கு வேறு அர்த்தம் கிடையாது. "நான் ஒன்றும் செய்யமாட்டேன் ; நீ செய்!" என்று கேட்பதுபோலத் தெரிகிறது! அண்ணு அவசரக்காரரல்ல. அவரது மனத்தில் இருப்பது அவரோடு நெருங்கிப் பழகியவர்களே சாமான்யமாகத் தெரிந்து கொள்ள முடியாதது. அவர் எதையும் வெளிப்படையாகச் சொல்லாமலிருக்கிருர். பலர் அதற்குபல அர்த்தங்கள் கற்பிக்கலாம்; ஆனுல் யாருமே ஒரு முடிவுக்கு வர முடியாது.

* * *

கொள்கையை விட்டு இம்மியும் பிசகி, ஒருவரை, அவர் திராவிடர் என்ற காரணத்துக்காக ஆதரிப்பது, அரசியலில் புகுந்தது முதல் இன்று வரை அண்ணுவுக்குப் பிடிக்காத காரியம். நமது கொள்கைக்குக் கொஞ்ச தூரத்திலாவது காமராசர் வந்து நின்ருல்தான் அவரிடத்தும், அவரது ஆட்சியிடத்தும் நாம் கொண்டிருக்கும் கொள்கையை அவர் தெரிந்து கொள்ள முடியும். அப்படி வந்து நிற்பதற்கு முதற்படிதான் தூத்துக்குடி வழக்கைத் திரும்பப் பெறுவது; இதன் காரணமாக உள்ளுக்குள்ளே சிலர்—முக்கியமாக பார்ப்பனர்கள்—"ஆகா" தூத்துக்குடி நாடார்களுக்கு விருதுநகர் நாடார் பரிவு காட்டுகிருர் "என்ருே," அண்ணுத்துரைக்கு பயந்து விட்டார் என்ருே பேசுவார்கள் என்றுதான் காமராசர் பயப்படுகிருர் என்ருல், அது அவசியமற்ற பயம் என்று கூற ஆசைப்படுகிருேம்.

கொடிய செக்ஷன்களின் கிழ், குமாரசாமி ராசாவால் வழக்குத் தொடரப்பட்டு, கூண்டிலே நின்ற கம்யூனிஸ்டுகளை, ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஆச்சாரியார் விடுதலை செய்தார். இதற்கு ஏதாவது காரணம் உண்டா? புதிய ஆட்சி காட்டும் 'சுமுக சமிக்ளுை' என்று இதற்குப் பொருளே தவிர 'பயம்' ஆகாது. காமராசர் துணிகரமாக, உடனே தூத்துக்குடி கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். கல்லக்குடி காண வேண்டும். இலங்கை தமிழர் பிரச்னையில் வடக்கத்தி சர்க்காரைத் தட்டிக் கேட்க வேண்டும்—இன்னும் அவர் கூறுகிற "பொதுப் பிரச்சினை"களில் நியாயமாக ஆராய்ந்து பார்க்கும்போது காணப்படுகிற குறைகளை நீக்க முயலவேண்டும். அப்படி ஆராய்ந்து பார்த்தால் தென்னுட்டின் குறைகள் அனைத்துக்கும் காரணம் வடக்கத்திப் பிடிதான் என்பது புலனுகும். அதில் வடக்கை எதிர்த்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நம் பக்கத்தில் வந்து அதைச் செய்யாவிட்டாலும் அங்கிருந்தே அவர் அதைச் செய்ய வேண்டும்; இதற்கான 'சமிக்ளுை'களை அவர் காட்டத் தொடங்கினுலே, நமது கொள்கை என்ன—அவர் விஷயத்தில்-என்பதை அவர் தெரிந்து கொள்ள முடியும்.

* * *

தன்னைத் திராவிடன் என்று கூட இன்னும் ஒரு இடத்திலும் ஒப்புக் கொள்ளாத காமராசர் இதையெல்லாம் செய்வாரா? நமக்கு நம்பிக்கை இல்லை! ஆனுலும் கால மாற்றம் நியாயமான கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்கிற நம்பிக்கையிலேயே இவ்வளவையும் கேட்கிருேம்.

சில அவசரக் கழகத்தாரைப் போல, சமையலுக்கும் சட்டியைத் தூக்குவேன், தலையில் போடவும் அதே சட்டியைப் பயன்படுத்துவேன்; வார்த்தை என்பது பச்சைக் களிமண்ணிலே பிடிக்கப்பட்ட பொம்மை. எப்போதும், எத்தனை முறையும் அதைத் தலைகீழாக மாற்றிப் பிடிப்பேன்" என்று திராவிட முன்னேற்றக் கழகம் குழப்பாது என்பதைக் காமராசர் உணர வேண்டும்.

அவர் உமி கொண்டு வந்தால், அந்த உமியால் அவருக்கு ஒத்தடம் கொடுப்போமே தவிர, அவல் கொண்டு போய்க் கொடுத்து விட்டு அண்ணந்து நிற்கமாட்டோம் என்பதை மீண்டும் வலியுறுத்துகிருேம். அவரிடமும் அவலை எதிர்பார்க்கிருேம்.

ஏற்றுக் கொள்வதா?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென்று வருகிற வீரம் பல வீரர்கள் கனவில் கூடக் கருத முடியாததாக இருக்கும். எவ்வளவு பொருமையாக அதுவும் இந்த நேரத்தில்—விளக்கம் கூறுகிருன் என்று பார்க்கிறீரா? படபடப்பு எனக்குப் பழக்கமில்லாத தொன்று. காரியத்தின் முடிவு மட்டும் வெற்றிகரமான படபடப்பாக இருக்கும், கணி கண்ணரே..."

-என்று மேலும் ஏதோ பேசுவதுபோல் வந்து திடீரென்று வீசினுன்வாளை! புலவனின் வாள் வீச்சு காமுகனைப் பலிகொண்டது. அதிலிருந்து பீரிட்ட ரத்தத்தை வலக்கையில் எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டே வெளியேறினுன் புலவன்.

அலமந்து நின்று கொண்டிருந்த. ரஞ்சனி அவன் அருகே ஓடினுள்.

புலவன் அவளை அன்போடு, பாசத்தோடு அணைத்துக்கொண்டான். அதில் வாலைப் பருவத்தை வாலிபன் தீண்டும் பருவ உணர்ச்சி இல்லை. புலவன் மூத்தாளுக, தந்தையாக நின்ருன்.

"நான் களங்கப்பட்டு விட்டேன்" என்று கூறி அவள் அழுதாள் பதிலுக்கு அவனும் கண்ணீரைச் சிந்தினுன்.

பாசம் மனிதனைக் கோழையாக்கி விடுகிறது.

"இனி நான் என்ன செய்வேன்"—அவள்

"அதுதான் எனக்கும் யோசனை"—அவன்

அவள் விம்மி அழுதாள்; அவளது கண்ணீரை அவன் துடைத்தான்.

அவள் சொன்னுள்,

"நான் மனத்தாற் களங்கப் படவில்லை. களங்கப்பட்டது என் உடல்தான் ஆனுல் என்னை யார் இனி ஏற்பார்கள்? இந்த வாதத்தை யார் ஒப்புக் கொள்வார்கள் !"

ஊருக்கு யோசனை சொல்லும் புலவன் தன் யோசனை இன்றி நின்ருன். அவளது கண்களிலே ஒரு பிரகாசம் மின்னிப் பொலிந்தது. முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் உறுதி வந்து விட்டது போல்—ஒரு முடிவு தெரிந்து விட்டது போல்—அந்த முடிவு லாபகரமானதென்று தோன்றி விட்டதுபோல் அவள் நிமிர்ந்து நின்ருள். நின்று...

"பிரபு !"

புலவன் திகைத்தான்.

"என் உண்மைநிலை அறிந்தவர்கள் நீங்கள் ஒருவர்தான் என்னை மன்னித்து நீங்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை உங்களிடம்தான் நான் எதிர்பார்க்கிறேன்"-என்ருள்

[கற்பிழந்தவளை, அந்தப் புலவன் ஏற்றுக் கொள்ளலாமா, கூடாதா? ஏன்? எது சரி? முடிவை எழுதுங்கள். சரியானதென்று ஆசிரியர் கருதுகிற முடிவு பத்துருபாய் பரிசு பெறும்]

[உலகத்தில் எல்லோரும் வாழத்தான் ஆசைப்படுவார்கள். அந்த வாழ்வு தனக்கும் கிடைக்காதா என்று 'தேன் மொழி' ஏங்குவதிலே வியப்பொன்றுமில்லை. ஆனால், அவள் ஊமையாகப்பிறந்துவிட்டாள். வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறாள்!]

தேன் மொழி

பெயர் என்னவோ கவர்ச்சிகரம்! பெயரைக்கேட்ட மாத்திரத்திலே தனியின்பம். ஆம், அவள் பெயர் தேன் மொழி. ஆனால்; தேன் மொழி பேச முடியாத நிலையில் இந்த உலகத்தில் பிறந்து விட்டாள். பெற்றவர்களோடும், சுற்றத்தார், நட்பினரோடும்கூடி, அன்பு கலந்த வார்த்தைகள் பேசி மகிழும் பாக்கியத்தை கொடுத்து வைக்கவில்லை. ஊமையாக பிறந்து விட்டால், இந்த பாழும் உலகத்தில் நிம்மதியாக வாழ முடியுமா? இந்த சங்கடத்தில் தேன் மொழி மட்டும் என்ன விதி விலக்கா?

பேட்டை ஒரு கிராமம். இயற்கை காட்சிகள் செறிந்த இடம்.

ஓர் பக்கம் நதியோடுகிறது. மற்றோர் பக்கம் தொடர்ச்சியான மலைகள். கண்ணுக்கெட்டியவரை பச்சை பசேல் என்ற காட்சி. தேன் மொழியின் வீடு நதியோரக்கரையில் இருந்தது. மருதை அவளின் தந்தை. அங்கமுத்து அவளின் தாய். தேன் மொழிக்கு இரண்டு மூத்த சகோதரிகள். ஆனால், அவர்கள் தேன் மொழியைப் போல் பேசா பாக்கியம் கொடுத்துவைக்கவில்லை. அவர்கள் இறக்கை முளைத்த பறவைகள். வானம்பாடி போல் கணவன் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். ஆனால் தேன் மொழி பருவமடைந்தவள். வாழ்க்கையில் இன்பத்தை நுகர அவளுக்கு ஆசையிருக்காதா? ஊமையாக பிறந்து விட்டால், உணர்ச்சி, இன்பம், துன்பம் எல்லாம் கிடையாதா? அவளும் மானிடப் பிறவி தானே! அவள் யாரிடம் சென்று தன் குறையைக் கூறுவாள்; அப்படிக் கூறினாலும் யார் அதை புரிந்து கொண்டு உதவி செய்ய முன்வருவார்கள். அவள் வாழ்க்கையை பற்றி சிந்திப்பாள் ஆனால், ஒருவித வழியும் கிடைக்காது.

மருதைக்கு தன் கடைசிப் பெண் தேன் மொழிமீது அளவற்ற பாசம். ஆனால், அவள் தாயாருக்கு இவள் ஒரு சுமையாக கருதினாள். பெற்ற பாசம் கூட தேன் மொழிக்கு கிட்டவில்லை. சதா எரிந்து விழுவாள் தேன் மொழிமீது, தேன் மொழி பருவ காலம் கடப்பதை—பற்றி ஊராரின்பேச்சு அவர்கள் காதில் விழுந்தது. எத்தனை நாளைக்கு ஒரு பெண்ணை அதுவும், வயது வந்தவளை வீட்டில் வைத்திருக்கலாம்! இந்த சமுதாயம் இடம்தருமோ? மருதை என்ன செய்வார் ஊமையை மணக்க யார் வருவார்கள். மருதை தேடாத மாப்பிள்ளை யில்லை, யாரும் முன்வர வில்லை. தன் பெண்ணின் மனவேதனையறிந்தவர் துடிக்காமல் இருக்க முடியுமோ?

தேன் மொழி பேச முடியாதவள் என்ற காரணத்தினால் மற்ற பெண்கள் இவளுடன் கூடி விளையாடுவது கிடையாது, இந்த உலகத்து எந்த மானிடப் பிறவியும், அவளுடன் பழக முடியாத நிலைக்கு விலக்கி வைக்கப்பட்டிருந்தாள். இனம், இனத்தைதான் நாடும் என்ற பழமொழி இங்கு நினைக்கவேண்டியிருக்கிறது. தன்னைப்போன்ற வாயில்லா பிராணிகளுடன்—ஆடு, மாடுகளுடன் பொழுது போக்குவாள். அதிலே அவள் தனியின்பம் அடைந்தாள். அவள் அவைகளை முத்தமிட்டு, தடவி கொடுத்து அவைகளின் முகத்தை தன் முகத்தோடு முகம் வைத்து அணைப்பதிலே அவள் இந்த உலகத்தையே மறந்துவிடுவாள்! இவைகளுடன் பழகாமல் இருந்தால் இன்று இந்த சீர்திருத்த உலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருப்பாள். மீதி நேரத்தை கழிக்க ஆற்றங்கரைக்குச் செல்வாள். கரையிலே உட்கார்ந்து, வேறு யாருடனும் பேச முடியாத அவள் இயற்கை எழிலுடன் பேசுவாள்! பறவைகளின் சப்தம் அவளுக்கு கொஞ்சு மொழி கீதமாக இருந்தது. இலைகளின் அசைவு அவளிடம் பேசுவதாக...

பூரிப்படைவாள அவள் வேதனையை சொல்லித்தீர வேண்டும் என்று நினைக்கும் போது அவள் கயல் விழியும்,-ரோசா அதரங்களும் துடிக்கும் ஆனால், வார்த்தை...

...தினம் இவ்வாறு தன் சகாக்களுடன், இயற்கை எழில், பறவை கூட்டத்திலே மகிழ்ந்து மன வேதனையை குறைத்துக் கொண்டாள்.

தேன் மொழி திருமண விஷயமாக, தாய் தந்தையருக்குள் சிறு சண்டை. பேச முடியாவிட்டாலும் உணரும் சக்தி இல்லையா? நிலைமையை உணர்ந்து கொண்டாள் தேன் மொழி. தாய் சமையற் கட்டுக்குச் சென்று விட்டாள். எதிர் பாராத விதமாக ஓடி, தன் தந்தையின் காலடியில் வீழ்ந்தாள். கதறினாள்! கண்ணீர் விட்டாள்! அவள் கண்ணாடிக் கன்னங்கள் சில்லிட்டது. அவர் என்ன செய்வார் மகளை தேற்றினார். அவருக்கு மனதிலே போராட்டமெழுந்தது. வேதனை தாங்க முடியவில்லை. கண்களிலேகண்ணீர்:— மகளை தேற்றி அனுப்பினார். அவள் வாழ்க்கையை பற்றி மீண்டும்சிந்தித்தாள்; ஆனால்,..

மருதைக்கு தேன் மொழியின் திருமண கவலையே, அவரின் உடலுக்கு ஆட்டம் கொடுத்து விட்டது. அவர் எலும்பும் தோலுமாகி விட்டார். தேன் மொழி—திருமணம். என்ற வார்த்தைகளை முணுமுணுத்து கொண்டிருந்தார். தந்தையின் உடல் நிலையைக் கண்டு தேன் மொழி பதறினாள். என்ன செய்வாள் பேதை! அவர் காலடியிலேயே கிடந்தாள், சகாக்களை மறந்தாள், தந்தைக்கு பணிவிடை செய்தாள். மருதை தன் மகளின் அன்பைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். ஆனால், அவளின் திருமணம் நினைவு வந்ததுமே, இந்த உலகமே சுற்றுவதுபோல் இருந்தது. படுக்கையில் புரண்டார். அவர் நிலையறிந்து அருகில்சென்றாள், அவள் கெண்டை விழியில் இருந்து அவள் நிலையை என்னவென்பதை புரிந்து கொண்டார். அவளை போய் தூங்கச் சொன்னார், கவலைப் படாதே என்று தேற்றினார்! ஆனால், அவள் விழியாலே பேசினாள். அந்த இடத்தை விட்டு நகரவில்லை. தேன் மொழி பேசும் சக்தி பெற்றவளாயிருந்தால் என்ற நினைப்பு மருதையின் விழியிலே கண்ணீர் முத்து, முத்தாக வந்தது. அவள் இன்பமடைவதற்கு வழிசெய்ய முடியாத நிலையில்தான் இருந்து என்ன உபயோகம் என்று மருதை கண்கலங்கினார். மருதை மரணவேதனையுடன் போராடிக் கொண்டிருந்தார். இனி இந்த உலகத்தில் மீண்டும் உலவுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை தேன் மொழி விழியிலே கண்ணீர், முகத்திலே வாட்டம்—இதயத்திலே போராட்டம்—உடலிலே இளைப்பு, மருதையின் காலம் நெருங்கி விட்டது. படுக்கையிலே தேன் மொழி திருமணம் என்று பிதற்றினார்.

* * *

ஒரு நாள்; தேன்மொழி குடும்பத்தில் பெருங்கிளை முறிந்தது. தேன் மொழி என்ன செய்வாள்! அழுதாள்! ஆனால், தேற்றுவார் யார்? தேன் மொழியால் தான் மருதை இறந்தார் — என்று குடும்பமே அவளை ஏசிற்று. தேன் மொழி அழுதாள், அழுதாள் அழுது ஓய்ந்தாள். இருட்டிவிட்டது வானத்தை காரிருள் கவ்விக்கொண்டிருந்தது. உலகத்தில் இன்னும்— உயிர் வாழ அவள் ஆசைபடவில்லை. அளவற்ற அன்பை தெளித்த தந்தையே மாண்ட பிறகு, அவள் யாருக்காக உயிர் வாழவேண்டும் அவள் வாழ முடியாதவளாகி விட்டாள் ஊமை பட்டத்தை தாங்கி வாழ்வில் இன்பம் காணாதவள்! பிறர் பேசி மகிழும் போது பொறுமை கொண்டவள்! ஊமை என்பதனால் உலகத்துடன் தொடர்பு வைத்துக்...

ஈ.வி.கே.சம்பத் சொல்லுகிறார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நட்சத்திரம் சாட்சி....என்றெல்லாம் பேசி இன்பக் கரை காட்டியிருப்பாள். அதற்குள் யாரோ சில சண்டாளர்கள்...! என இப்படித்தான் ரோஹன் குரு கருதினார். அவருக்கு அன்றிரவு ‘கிடைக்க வேண்டியது’ கிட்டாமற் போயினும், அரசி அவருக்காக அந்த நள்ளிரவில் வந்தாள் என்பதும், வந்த அரசி சூழ்நிலை மாறுபாட்டால் ஒரு சொல்லும் சொல்லாமல் திரும்ப நேரிட்டிருப்பினும் அவள் வீசிய அந்த மலர், வீசுமுன் அந்த மலரை அவளது வாய் மலர் முத்தமிட்டதும், அவர்பால் அரசிக்கு முன்னைய அலட்சியம் இல்லை என்பதுமட்டுமல்ல, ஆசை, அபாரமோகம் வளர்ந்துள்ளது என்பதும் குருவைப் பொருத்தவரையில் ‘தெளிவாகி’ விட்டது. இந்நிகழ்ச்சி 1784-ம் ஆண்டு ஆகஸ்டில். மீண்டும் கடிதங்கள் மூலம் ‘காதல்’ தொடர்கிறது தாதி மோட்டியின் தயவில்!

டிசம்பரில் யாரோ, கூறிய யோசனையின் மீது ஏங்கிக் கிடந்த பொற்கொல்லன் தாதி மோட்டியை அணுகி, வைர மாலையை அரசி வாங்குமாறு செய்யவேண்டுமெனக் கெஞ்சுகிறான். மறுக்கிறாள். ஆனால் 1785 ஜனவரியில் தாதி பொற்கொல்லனைச் சந்தித்து, ராணி மாலையை விலைக்கு வாங்குமாறு தனது அற மன்றத் தலைவர் ரோஹன் குருவைப் பணித்துள்ள நல்ல செய்தியை அறிவிக்கிறாள்.

தனது துன்பமெல்லாம் நீங்கியது எனும் நினைவில், துள்ளிக் குதித்துப் பொற்கொல்லன் குருவிடம் ஓடுகிறான். ரோஹன் குருவும் தாதியின் செய்தியை உறுதிப்படுத்துகிறார். ஆனால் விலை முழுவதும் ஒரே தவணையில் தரமுடியாதென்றும் பல தவணைகளில் தான் தரமுடியுமென்றும் அதற்குப் பொற்கொல்லன் சம்மதிக்கிறானா என்றும் கேட்கிறார். ‘பீடை’ தொலைந்தால் போது

மேரியின் கையெழுத்துடன் கூடிய கட்டளைப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மாலையை ரோஹன் குருவிடம் ஒப்படைக்கிறான். விஷயம் பரம ரகசியமாய் இருக்க வேண்டுகிறார் குரு. ஆட்க்ஷேபணையும் உண்டோ என்கிறான் பொற்கொல்லன் பொயிமர்.

‘அரசியின் கட்டளைப்படி’ ரோஹன் குரு லெஸ்குலாக்ஸ் என்பவனிடம் மாலையை ஒப்படைத்து விடுகிறார். முதல் தவணைப் பணமும் குருவின் மூலம் பொற்கொல்லன் பெறுகிறான்.

ஆகஸ்டு 15-ம் நாள் அரசன் ரோஹன் குருவை அழைக்கிறார். “ராணிக்காக நீ வாங்கிய ‘வைரமாலை’ பற்றிய விஷயம் என்ன?” என்று அரசன் கோபத்தோடு கேட்கிறான். குரு அரசியைப் பார்க்கிறார்—தயங்குகிறார். உடனே ரோஹன் கைது செய்யப்படுகிறார்.

ரோஹன் எல்லா உண்மைகளையும் அரசன் முன்னிலையில் ஒத்துக்கொண்டு தன்னை மன்னனின் கருணைக்கு ஒப்படைத்துக் கொள்கிறாரா அல்லது வழக்கைச் சமாளிக்கப் போகிறாரா என்று கேட்கப்படுகிறார். ரோஹன் தான் வழக்கையே விரும்புவதாகத் தெரிவித்து விடவே, வழக்கு நடைபெறுகிறது.

பாரீஸ் நகரில் பெரும் பரபரப்பு. வழக்கின் முடிவு இரண்டிலொன்றை வெளிப்படுத்தும் என்றே பிரஞ்சு மக்கள் எதிர் நோக்கினர். ஒன்று அரசியின் பெயரை சொல்லி ரோஹன் மோசடி செய்து மாலையைப் பறித்திருக்க வேண்டும் அல்லது அரசியே ரோஹன் மூலம் தந்திரமாக மாலையைப் பெற்றுக் கொண்டு ஒன்றும் தெரியாதவளைப் போல் நடிக்க வேண்டும். இந்த இரண்டிலொன்று நிச்சயம் என்றே பிரான்ஸ் கருதி, வழக்கின் முடிவை ஆவலோடு எதிர் நோக்கியிருந்தது.

இங்கிலையில் 1786 மே 31-ந் தேதி வழக்கு முடிகிறது.

...வன் என விடுவிக்கப்படுகிறான். அப்படியாயின் அரசியின் கதி என்ன? அரச குடும்பத்தின் மீது துடைக்க முடியாத கறை வீழ்ந்து விடுகிறது. அரச குடும்பம் அரண்மனை ஆகியவை மனிதத் தன்மைக்கும் அப்பாற் பட்டவை என அது நாள் வரை கருதப்பட்டு வந்த நிலையில் ஒரு பெரிய மாற்றம். அரண்மனையின் அன்றாட நடவடிக்கைகளில் சதி, மோசடி, களவு, விபசாரம், இவைதான் ஆட்சி புரிந்து வருகின்றன என்பது பிரானிலில் அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகியது.

ரோஹன் விடுவிக்கப்பட்டபின் அரண்மனை வாளாயிருக்கவில்லை. தாதி மோட்டியை சிறையிலடைக்கிறது. அவளுக்குச் சவுக்கடி தரப்படுகிறது. அவள் சிறையை விட்டுத் தப்பியோட ‘அரண்மனையே’ ஏற்பாடு செய்கிறது! அவள் சிறையிலிருந்து ஓடுகிறாள். பிரான்ஸை விட்டே ஓடுகிறாள்.

இது சம்பந்தமாக வாய் திறவாமல் இருக்க தாதியின் கணவனுக்கு ‘அரண்மனை’ 8000 பவுன்கள் (சுமார் 1,04,000 ரூபாய்கள்) தந்து அவன் வாயை அடைக்கின்றது.

இவை அவ்வளவும் உடனுக்குடனே அம்பலமாகி விடுகிறது. நாட்டு மக்கள் அரசி மேரி பெரிய எத்துக்காரி என்னும் முடிவுக்கு வருகின்றனர். ‘ஆஸ்திரியக்காரி’ மீது ஏற்கனவே வளர்ந்து வந்த வெறுப்பு இந்நிகழ்ச்சியினால் கரை புரண்டு ஓடுகிறது. நாட்டின் துயரங்கள் அனைத்துக்கும் அவள் தான் காரணம் என்று பாமரமக்களுட்பட அனைவரும் கருதுகின்றனர். பல்வேறு காரணங்களால் அரசாங்கக் கஜானா வறண்டு போனதற்கும் இவளே காரணம் என்று பேசப்படுகிறது. மேரி ‘திருமதி தரித்திரம்’ என்றழைக்கப்பட்டாள்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் அரசி தெருக்களில் செல்வதென்பது

தெருவில் அவளது கோச்சு வண்டியை கண்ட மாத்திரத்தில் தெருவில் உள்ளோர் ஏளனத்தையும் இழி மொழிகளையும் வீசினர்.

சுருங்கச் சொல்லுமிடத்து பல நூற்றாண்டுகள் வாளும் ஜெபமாலையும் அரண்மனை, அரச குடும்பம் இவைகளைச் சுற்றிச் சிரமப்பட்டு எழுப்பியிருந்த ‘மகத்துவக்’ கோட்டையில் வேறு பல காரணங்களால் வெடிப்புகள் தோன்றியிருப்பினும் இச்சம்பவம் அதை முழுவதையும் தகர்த்துத் தூளாக்கி அரண்மனை ஆபாசங்களை அம்பலப்படுத்தி விட்டது.

அரண்மனையின் நிலை இதுவாக நாட்டின் நிலை யாது? அந்தோ! நாளுக்கு நாள் இருள் சூழும் நிலையில், நாடு நிதி நிலைமையில் ஈடு செய்ய முடியாத பற்றாக்குறையை நாடி வெகு வேகமாய்ச்சென்று கொண்டிருக்கிறது.

16-ம் லூயி பட்டம் சூட்டிக் கொண்டவுடன் 15-ம் லூயியின் மந்திரிகள் நீக்கப்பட்டு புதிய மந்திரிகளை நியமித்தான். முதல் மந்திரியாக மாரீபஸ் என்பவர் நியமனம் பெற்றார். நிதி மந்திரியாக டர்காட் என்பவர் நியமிக்கப்பட்டார். டர்காட்டின் நியமனம் லூயியின் ஆட்சிக்கு சிறிது காலம் நம்பிக்கையளித்தது. நீதியும், கண்டிப்பும், நாணயமும், மாசு மறுவற்ற நெறியுடைய வாழ்வும் டர்காட்டை மக்களின் பெருமதிப்புக்குரியவராக்கின. ஆனால் நிதி அமைச்சரின் திறமையும், பண்பும் நிதியாகப் பெருக முடியுமா?

[கடந்த மூன்று வாரங்களாக வெளி வந்த இந்த பகுதி **சேலம் நீலா நிலையம்** வெளியீடான ‘முடி சாய்ந்தது’ என்ற புத்தகத்தில் உள்ளது.]

ஏற்றுக் கொள்வதா?

[இந்தக் கதையைப் படியுங்கள், படித்து, முடிவிலே கேட்கப்பட்டுள்ள கேள்விக்குப் பதில் எழுதுங்கள். சரியான பதில், பரிசு ரூ 10/- பெறும். நீங்கள் சொல்லுகிற முடிவு; மனிதன், படக்கதையின் முடிவு பற்றிய அபிப்பிராய பேதத்தையும், "சீதை"யை "ராமன்" ஏற்றுக் கொண்டது பற்றிய கருத்து வேற்றுமையையும், தீர்த்து வைக்கும்.]

—: நல்லதம்பி :—

வானங் காட்டும் வர்ணஜாலங்களை விழிகளுக்குள் அடக்கிக் கொண்டு பூமியிலே ஒரு மாது பக்குவம் எய்தி யிருந்தாள். பார்த்த உடனேயே சேர்த்துக் கொள்ளும் ஆசை தரத் தக்க வதனத்தை அவள் பெற்றிருந்தாள். மேகங்களாகிப் பறந்து போய் விடக்கூடாதே என்பதற்காக கூந்தலை மேலே சுற்றிக்கட்டியிருந்தாள். உடுக்கை என்று புலவர்கள்சொன்ன இடையிலே மெல்லிய பட்டாடையைச் சுற்றி, அலட்சியமாகத் தொங்கவிட்டிருந்தாள். அவள் நடக்கும் போதெல்லாம், அவள் நடக்கிறாளா, தென்றல் அவளை தள்ளிக் கொண்டு போகிறதா என்ற சந்தேகத்தை கிளப்பிக் கொண்டிருந்தாள்.

அவள் ஒரு நாட்டியக்காரி...

படபடப்புகளுக்கும் அவசர வளைவுகளுக்கும் அர்த்தம் கற்பித்துக் கொண்டுவரும் கூட்டத்தின் நடுவில் ஆடுபவள். செடிகளும் கொடிகளும் ஆடுவதைப் பார்த்து மனிதர்களும் ஏன் இப்படி ஆடக்கூடாது என்று கற்பித்து, நாட்டியத்தைக் கண்டு பிடித்த முதல் மடையனின் வரலாற்றுக் கால வாரிசு அவள். கை வளைப்பதாயினும் கால் வளைப்பதாயினும் இலக்கணத்தோடு வளைக்க வேண்டும் என்கிற வித்தையைக் கற்றுத் தேறியவள்.

அவள் பெயர் ரஞ்சனி......

அவள் அழகைப் பற்றிச் சொல்வதைக் காட்டிலும் பல பேர் அவளிடத்துக் கொண்ட ஆசைபற்றிச் சொல்வது அவளை சுருக்கமாக உருவகப்படுத்தும் ஆதாரம்; மோசூர் நகரம் தன் ஜனத்தொகையில் சரிபாதியின் மனதை அவளிடம் ஒப்படைத்திருந்தது.

அவள் ஆடுவாள்...கூட்டம் ஆரவாரிக்கும். ஆடவர்கள் துயில் கொள்ளாது அவதிப்படுவர் எண்ணி எண்ணி ஏங்கியவர்கள் பலர். கிட்ட நெருங்கிக் கேட்டவர்கள்பலர். எல்லோருக்கும் அவள் ஒரே பதில்தான் சொன்னாள். "நான் கலையை மணந்து விட்டேன். இனி எனக்கு மறுமணம் கிடையாது"

கனகமணிப் புலவர் மோசூர்க் குறுநிலத்தின் ஆஸ்தானக் கவி அழகுமிக்கவர்; வாலிபர். அவர், நாட்டியக்காரிக்கு வேண்டிய பாடல்களை எழுதிக் கொடுத்தார். பாடல்களின் கருத்துக்களே அவளது ஆட்டத்தை அழகு படுத்தின என்பர் மோசூர் மக்கள். புலவர் அவளைக் காதலித்ததை மோசூர் மக்கள் அறிய மாட்டார்கள்.

* * *

அந்தி நேரம்......

அன்றைக்கு ரஞ்சனியின் நடனம் வணிகர் பொது விடுதியில் நடைபெறுகிறது. மோசூர் நகரமே திரண்டிருக்கிறது. ரஞ்சனி அருமையாக ஆடுகிறாள். என்றைக்கும் இல்லாது அவள் அழகு அன்றைக்கு புதுமை கலந்து சோபிக்கிறது

கூட்டத்திலிருந்து கனிகண்ணன் என்பான் எழுந்தான். கனிகண்ணன், மோசூர் அமைச்சரின் புதல்வன். ஆட்டம் இன்னும் சிறிது நேரம் நடைபெறும் என்றிருந்தும் இடையிலேயே நிறுத்தக் கட்டளை இட்டான். திடீர் கட்டளை! அதுவும் அதிகாரம் இல்லாத அமைச்சர் மகனிடமிருந்து! ரஞ்சனி திடுக்கிட்டாள் காரணம் கேட்கவில்லை. நடனத்தை நிறுத்திவிட்டாள். ஆட்டக் கருவிகளை வண்டியில் ஏற்றினாள். தானும் வண்டியில் ஏறப் போனாள்.

ஒரு சேவகன் வந்தான்.

"தாங்கள் ரதத்திற்கு வரவும்" ரஞ்சனி திகைத்தாள்.

"ஏன்?"

"கனிகண்ணன் ஆணைக்குக் காரணம் கிடையாது."

ரஞ்சனி பேசாமல் ரதத்தில் சென்று ஏறினாள். முன்பக்கத்தில் சாரதியோடு அமைச்சர் மகனும் உட்கார்ந்திருந்தான்.

வண்டி ஒரு வனத்தினுள் வந்து நின்றது.

ஆசிரமம் போன்றதொரு இடம். அழகாக அமைக்கப்பட்டிருந்தது. காமுகர்களின் கையில் சிக்கிய கிளிகளைக் கதறவும் முடியாமல் பறக்கவும் முடியாமல் அவதிப்படக் கூடிய பயங்கரமான வனம் அது. அந்த ஆசிரமம் எத்தனை கன்னிகளைக் கண்டதோ! படுக்கை அறைத் தான் ரஞ்சனிக்குக் கூறிற்று. ரஞ்சனி தடுமாறினாள்.

மெதுவாகக் கூறினாள்;

"நீங்கள் நினைப்பதுபோன்ற பெண் அல்ல நான்."

அவன் கூறினான்.

"யாருமே அப்படிப்பட்ட பெண்கள்ல்ல."

"தயவு செய்து என்னை அனுப்பிவிடுங்கள்"

"இன்று ஒரே நாள்! காலையில் அனுப்பி விடுவேன்!"

"இதுவரை நான் தவறியவளல்ல. இனியும் நான் தவற விரும்பவில்லை."

"இதையெல்லாம் தவறென்று நான் கருதவில்லை,"

"நீண்ட நேரம் இந்த ஆசிரமத்தில் நின்று விவாதிப்பதே என் கற்பைக் களங்கமாக்கிக் காட்டிவிடும். தயை செய்து என்னை அனுப்பிவிடுங்கள்"

பைத்தியக்காரி நீ. வாழத் தெரியாதவள். கொஞ்ச நேரம் பேசாமலிரு; நீ காதல் உரையாட வேண்டும் என்று நான் விரும்பவில்லை; உன் மேனி என் சிந்தையைச் சிதைத்துவிட்டது. நேரடியாகவே கேட்கிறேன். அந்த மேனியை மட்டும் இன்று இரவு முழுதும் என் உடைமைக்கு அதுவரை உன் இருதயக் கண்களை வேண்டுமானாலும் மூடி வைத்துக் கொள். காலையில் அந்தக் கண்களைத் திறந்து பார். உனக்கு நீ களங்கமற்றவளாக வே தெரிவாய்"

"வேண்டாம் அதற்குக் கோயிலிலே எத்தனையோ சிலைகள் உள்ளன. ஐய! தயை செய்து என்னை அனுப்பிவிடுங்கள். இதுவரை இந்நாட்டில் இப்படியும் நடக்குமென்று எனக்குத் தெரியாது."

"நடவாதது நடப்பதில் தான் புதுமை இருக்கிறது. சரி, தாமதிக்காதே"

—என்று கூறியபடி அருகிலே அமர்ந்தான் கனிகண்ணன். ரஞ்சனி எழுந்தாள், சீறினாள், வசைபாடினாள். "நெருங்காதே" என்றாள். வாதாடினாள். அலறினாள்; கேட்கவில்லை, அவன். கட்டிப் பிடித்தான். எருமை மலர் மிதிப்பது போல் துவைத்தான். ஆனாலும் அவளைக் கெடுக்க முடியவில்லை.

திடீரென்று ஒரு குரல்......

இசை வெள்ளத்திலே கவிதையைப் பொழிந்தது.

தூரத்திலிருந்து அந்தக் குரல் கேட்டது.

ரஞ்சனி அந்தக் குரலில் இணைந்தாள் தன்னை சுற்றியுள்ள பயங்கர சூழ்நிலையை மறந்தாள், ரசிக்க ஆரம்பித்தாள். புறப்பிடிப்பது போல் கனி கண்ணன் அவளைப் பிடித்தான்; மீண்டும் அவள் திமிறினாள்; ஆனால் முன்பிருந்தபலம் இப்போது அவளுக்கில்லை. கனி கண்ணன் அவளது கற்பைப் பலிகொண்டான்.

தான் கெட்டது அறிந்தாள், பேதை. அபல முற்றால் "ஓ" வென்று அலறினாள்.

அந்தக் குரல், தனிமையில் இனிமை கண்டு இசைபாடிக் கொண்டிருந்த புலவனின் செவிகளில் பாய்ந்தது.

அலங்கோல நிலையில் கதவைத் திறந்தாள் ரஞ்சனி எதிரே புலவன் நின்றான்; அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு அவள் அழுதாள்; ஒரு கன்னியின் கதை முடிந்து விட்டது என்று கருதினான் புலவன்.

கீழே கிடந்த வாளைத் தூக்கிக் கொண்டான். கனி கண்ணன் சிரித்தான்.

"என்ன புலவரே! கத்தியைத் தூக்கக் கூடப் பழக்க மிருக்கிறதா! அழகிலே இளகிவிடும் கோழைகள் அவசரத்திலும் பயத்திலும் கத்தியைத் தூக்கும் போது பரிதாபமாகத்தான் இருக்கிறது! என்று கூறி நகைத்தான்.

புலவன் வலக்கையிலிருந்த கத்தியின் முனையை இடக்கையில் பிடித்துக் கொண்டே பொறுமையாகச் சொன்னான்,

"கனி கண்ணரே புலவனுக்கு கத்தி எடுத்துப் பழக்கமிருக்கிறதோ இல்லையோ, காமுகர்களைச் சாய்ப்பதிலே சில சமயம் அவர்கள் கைகளை கூடக் கத்திகளாக்கி விடுகின்றனர்; நான் புலவன் என்பதிலே வேண்டுமானாலும் நீர் சந்தேகப்படும். ஆனால் வீரனா இல்லையா என்கிற சந்தேகத்தை விட்டு விடும்! அழகினைப் பாடுபவன் எல்லாம் கோழை என்று கருதாதீர். புலவனுக்குத்

[2-ம் பக்கம் பார்க்க]

பெரும்பயணம்

கண்ணதாசன்

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தில்
அழகு நகர்க் காஞ்சியிற் காங்கிரஸ் மாநாட்டில்,
தாயகத்துத் திராவிடரின் வகுப்புக்கேற்ப
சரிபாதிச் சதவிகிதம் ஸ்தானம் கேட்ட
"தீய" செயல் பார்ப்பனர்கள் திருக்கூட்டத்தில்
திகைப் பெழுப்ப, நாலோர்கள் ஒன்றாய்க் கூடி
பாயும் வகை தேடியதும், பெரியாரோடு
பகுத்தறிவு எஸ். ராமநாதன் சேர்ந்து

காங்கிரஸைக் கைகழுவி வெளியில் வந்து
கர்ச்சனைகள் புரிந்ததுவும் தன்மானத்தைத்
தாங்கிவளர் சுயமரியாதை இயக்கம்
தளிர்நடை போட் டெங்கணுமே வளர்ந்த காட்சி
ஏங்கிய தென்னாட்டவர்க்கு இன்பமாக
எல்லவரும் வந்ததிலே சேர்ந்த யாவும்
திங்கறு செந்தமிழ்ப் பாட்டிற் கூறும் காலை,
தித்திக்கும்! தித்திக்கும்; மகிழ்வே மல்கும்!

'குடியரசு' எனும் ஏடு இயக்கத்தின் தூண்!
கொலை வாளாம் 'புரட்சி' இதழ் மற்றோர் தூணும்!
'விடுதலை' யும் 'பகுத்தறிவு' வீர ஏடும்
விளக்க மறு சமுதாயம் விளங்கத்தோன்றும்.
"கெடுதலையே இனி இல்லை! கிளர்ந்தார் வீரர்!
கீழ்க்குலத்தார் பார்ப்பனர்க்கும் மேலே செல்வார்!
படு மனமே படு! நாட்டில் நீ விதைத்த
பாழ்காட்டில் நீ அழிவாய்!" என்றார் வீரர்!

தமிழகத்தின் இருள்போக்கும் பணியில் அன்று
தன்மானங் காப்பதற்கு எழுந்தோர் தம்மில்
அமிழ்தான தமிழாளன்—அஞ்சாநெஞ்சன்
அழகிரியும், செயல் வீரர் **எஸ. வி. லிங்கம்,**
இமைக்காத விழியோடும் செயலே கண்ணாய்
இருந்திட்ட **சௌந்தரபாண்டியனார்** தாமும்
அமைவான மனத்தார் **சிங்காரவேலர்**
அனைவோரும் நல்லதொரு இடங்கொள்கின்றார்!

நாகைமணி, நடராசன், டி. என். ராமன்
நயவார்த்தைக் கைவல்யசாமியாரும்
வாகைபெறு 'பூவாளூர்' அண்ணல் தாமும்
வளக்கவிஞர் பாரதிதாசன், சித்தையன்
பாகுமொழி இராமசுப்பையாவோடு
'பண்பான' குருசாமி ஜீவானந்தம்
ஆக இவர் மட்டுமல; வீரத்தாய்மார்
அன்னை நாகம்மை இராமாமிர்தத்தார்.

கூறுவதென்; சேரனுக்குப் படை வாய்த்தாற்போற்
குளிர்ந்த முகப்பெரியார்க்குத்தொண்டர் வாய்த்தார்!
"ஆறுவதோ! அடங்குவதோ? இல்லை இல்லை!
ஆரியர் தம் கோட்டையினைத் தூளாய் ஆக்கி
மாறிவரும் புதுயுகத்தைக் காணுமுன்பு
மற்றுமொரு வேலை எமக்கில்லை" என்றே
போர் முரசம் ஆர்க்கின்றார்; புதுமைப்பாட்டைப்
பூமியெலாம் பாடுகின்றார் ;! இந்நேரத்தில்...

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழில்
அக்கிரமக் காங்கிரஸை விட்டுவந்த
சேய்மனத்து **முத்தையா** அமைச்சராகி
திருநாடர் **பானகலின் உ**தவியோடு
தாயகத்து மக்களுக்கு 'வகுப்புவாரி'ச்
சந்தோஷச் செய்தியினை அறிவிக்கின்றார்!
நோய் மனத்து முப்புரியார் கூவுகின்றார்!
"நுழைந்ததய்யா 'வகுப்புவாதம்'" என்கின்றார்!

வகுப்புவாரிச் சட்டம் வந்தபின்பு
வளநாட்டில் கல்வியறிவில்லாமாந்தர்
தொகுப்பாகத் தம் முள்ளே சிலரை யேனும்
தொல்லையிலாமற் பள்ளிக்கனுப்பலானார்!
அரசாங்க அலுவலகந் தன்னிற் கூட
அமைச்சரவர் அம்முறையை புகுத்தச் செய்தார்
விரைவாகத் தென்னவரின் மக்களெல்லாம்
வெளிச்சத்திற் பயமின்றி நடக்கலானார்!

1937:-

குள்ள நரிச்செயல் செய்யும்-நச்சு உள்ளக்
கொலைகாரன் இராசகோபாலாச்சாரி
கள்ள மறு தாய் நாட்டின் பொறுப்பை ஏற்றுக்
கயமையிலே ஆட்சி புரிகின்றார்! அன்று
பிள்ளை மனங் கெடுப்பதற்கே இந்தியென்னும்
பிய்ந்த செருப்பினை எடுத்து, தமிழர் சேயின்
உள்ளமதிற் **கட்டாயம்** புகுத்தவென்று
உரைத்ததனை கேட்டவர்கள் துடித்தார் மாதோ!
"இளங்குழந்தை நெஞ்சினிலே விஷமா! சிச்சி!
இழிகுணத்தான் செய்கையினைத்தடுத்தே நிற்போம்!
வளங்கொல்ல வந்துற்றான் ஆரியப்பேய்!
வன்னெஞ்சன்! இந்தித் தேவடியாளைத் தன்
குலமாதாய்க்கொண்டுவர, வீர நாட்டார்
கோழைகளாய்ப் போவதிலும் சாவே நன்று!
களங்காண்போம்!" என எழுந்த தோழர் தம்மிற்
கனிவுதரும் புன்னகையார் **அண்ணா** நின்றார்!
வெற்றிலையின் காவிபடி பல்லும்-மேலே
வெறும் வார்த்தை சிந்தாத உதடும்-ஆங்கே
வற்றாத இளமை சொலும் மீசை-என்றும்
மங்காத சோதி எனும் நுதலும்-கண்டோர்
அறிஞருக்கும் அறிஞரிவர் என்னும் வண்ணம்
அளந்தளந்து நயத்தோடு பேசும் பேச்சும்
உருவாகி வந்துற்ற நிலையிற்றோன்றும்
உயர்குணத்தார், படையினிலே முன் நிற்கின்றார்!
(தொடரும்)

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்!

நேஷனல் புரோடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதராஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்: **மேனகா**

பத்மினி பிக்சர்ஸ்: **முதல் தேதி**

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல்
நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம்

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்..

கதையமைப்பையோ - கற்பனைக்கருத்துக்களையோ - சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் இசைவு பெறல் வேண்டும்.

(முன் இதழ் தொடர்ச்சி)

காட்சி 21

[கட்டபொம்மன் சிவகங்கை ஜமீன் சேதுபதியின் உதவியை நாடி—சந்திக்கின்றான்; அவ்வமயம் தூதனொருவன் ஓலையொன்றைக்கட்டபொம்மு விடம் கொடுக்க—அவன் மனதினுள் கடிதத்தைப் படிக்கின்றான்.]

மனம் : உம்மை அழைத்தோம். அவமதித்தீர். நாளும் கோளும் பார்த்து வருவதாகக் கூறி நையாண்டி செய்தீர் ! வரியை விதித்தோம் ; தருவதாகக் கூறித் தவணை கேட்டீர் ! இருக்கட்டும் என்றெண்ணினேம் ! இன்னும ஏமாற்றி வருகின்றீர் ! இம்மடல் கண்டவுடன் வந்து காணவேண்டும்...இன்றேல்.....

கட்டபொம்மன் : இன்றேல்......களிற்றைக் காட்டுப் பூனை கண்டதுண்டமாக்கிவிடுமாம். பரதேசி வெள்ளையன் பாளையப் பட்டுத் தலைவனைப் பயமுறுத்துகின்றான். நாடாண்ட பரம்பரையிடம் நாடோடிகள் நையாண்டி பேசுகின்றார்கள். அதற்கு நாமும் கைகட்டி வாய்பொத்திக் கங்காணியாயிருப்போமென்ற எண்ணத்தால்......பேட்டிகாண வேண்டுமாம்......பேட்டி.........என்ன நாத்துடுக்கு ?

சேதுபதி : நண்பரே அவர்கள் நாத்துடுக்காகப் பேசுவதற்கு நியாயம் இருக்கிறது.

கட்டபொம்மன் : என்ன நியாயம் இருக்கிறது. ஆண்ட பரம்பரையிடம் அன்னியப்பதர்கள் பேசுவதற்கு நியாயம்இருக்கிறதாம் நியாயம். என்ன நியாயம் ?

சேதுபதி : ஆம். ஆண்ட பரம்பரைதான், நாம். ஒப்புக்கொள்கின்றேன். ஆனல் அன்னியன் கைக்கூலிகளும் நாம்தானே. மானத்தோடு வாழ்ந்தவர் நாம்தான் ; ஒப்புக்கொள்ளுகிறேன். இன்று மானத்தை விற்றுத்திரிபவரும் நாம்தானே. கடலெல்லாம் கடந்து கப்பம் கொண்ட கன்னித்தமிழ் நாட்டான்—காட்டிக்கொடுத்து நாட்டைக்கவரும் நிலைக்கு ஆளான பிறகு வெள்ளையர் இந் நாட்டில் கொள்ளையடிப்பதில் தவறென்ன ? குறும்புகள் புரிவதில் குற்றமென்ன ?

கட்டபொம்மன் : நன்று கூறினீர் நண்பரே! கள்ளத்தனமாகக் கொள்ளையடிக்கும் வெள்ளையர்களோடு நாம் கலந்து உறவாட வேண்டுமென்கின்றீர்! ஏன் அப்படித்தானே ! கொஞ்சும் மொழிகள் பேசி அஞ்சி நின்று இந்தக் குவலயத்தை ஆளலாம் என்றெண்ணிவிட்டீர் ! உம் எண்ணம் ஈடேறட்டும்...மறவர் குடியில் பிறந்த மாணிக்கம் என்றெண்ணித் தேடிவந்தேன்.........அது மண்ணில்கிடக்கும்......

சேதுபதி : அவசரப்படாதீர் ! நிலைமையைச் சொன்னேன் பொறுமை இழக்கவேண்டாம். உங்கள் விருப்பம் எதுவோ ! அதுவே என் விருப்பம். உங்கள் கைப்பாவையாக இருக்கக் காத்திருக்கின்றேன். நண்பரே ! என்னிடம் தாங்கள் எதிர் பார்ப்பது......?

கட்டபொம்மன் "வெள்ளையனே வெளியேறு" என்ற வீர முழக்கம் நாட்டின்: வீடெங்கும் முழங்கவேண்டும். வெள்ளையரோடு இந்த வீரபாண்டியன் வெற்றிப்போர் புரியும்போது சேதுபதியின் வீரர்கள் எங்கள் நாட்டின் பாதுகாவலராகத் திகழ வேண்டும்.

சேதுபதி : உறுதியாகச் செய்வேன்....உரிமைப் போராட்டாத்திற்காக......

கட்டபொம்மன் : அறப்போர் புரிந்து அமைதியை நிலை நாட்டலாமென்றிருந்தேன்......ஆனல் ஆணவக்காரர்கள் அதிகாரப் பலத்தைக் காட்டி—நம்மை அடக்கு முறைச் சிறையில் தள்ளிவிட்டனர்......சட்டம்......அவர்கள் இட்டதெல்லாம் சட்டம் மூச்சு விட்டால் சட்டம்... முனகினல் சட்டம் எல்லாம் அவசரச் சட்டங்களாகி விட்டன. சட்டமாம் சட்டம்...அவசரச்சட்டம்.

காட்சி 22.

[சாலை வழியில் கருப்பன் கொண்டையன் முதலியோர் உரையாடிச் செல்கின்றனர்.]

கருப்பன் : அவசரம் ! சட்டம் ! சட்டம் ! (உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு திருப்பித்திருப்பி கூறிக்கொண்டிருக்கின்றான்) .

கொண்டையன் : அண்ணே ! அண்ணே !! (உரத்த குரலில்) அண்ணே ! அண்ணே !!

கருப்பன் : (விழித்துப்பார்த்து) அட என்ன தம்பி !

கொண்டையன் : என்னண்ணே ! மந்திரம் போடுகின்றயா ? இல்லை தந்திரம் புரிகின்றயா ?

கருப்பன் : மந்திரமும் இல்லை....தந்திரமும் இல்லை தம்பி !

கொண்டையன் : பின்னே என்ன ? அவசரச் சட்டம் ! அவசரச்சடடம் ! எத்தனை முறை அவசரச்சட்டம் ?

கருப்பன் : ஆமா ! நீயா யோசித்துச் சொல்லு தம்பி ! இந்தத் துரைப்பயலுகள் பண்ணறது–அவர்கள் பேச்சு–அவர்கள் செயல்–ஒன்றுகூட சரியில்லை தம்பீ !

கொண்டையன் : (வாயைப் பொத்தி) உரக்கப் பேசாதே ! நமக்கும் ஏதாவது......

கருப்பன் : ஏன் அண்ணே ! பயப்படுகிறய் ! நம்ம தமிழ் அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது அட! அப்படிப்புரிஞ்சாத் தான் என்ன முழுகிப்போறது — தலைக்கு மேலே அப்புறம் என்னண்ணே !

கொண்டையன் : அது சரி – சாண் போனல் என்ன ? முழம் போனல் என்ன ? சமாச்சாரம் என்ன தம்பீ !

கருப்பன் : நம்ம கட்டபொம்மு ராஜா முப்பது பேருக்கு மேலே யாரையும்கூட அழைத்துப் போகக் கூடாதாம் !

கொண்டையன் : அடே ! அதெப்படி ? முடியும். அரசர் புறப்பட்டால் படை பல்லக்கோடுதானே புறப்பட முடியும்..... அப்ப......முப்பது முப்பது பேராக வரிசையாகப் போகவேண்டியதுதான்.........சட்டத்தை மீறுமல் அறப்போரா ? இல்லை சட்டத்தை மீறிய மறப்போரா ? என்ன போர் தம்பி ! தொடங்கப்போகிறது......?

கருப்பன் : என்ன போரானல் என்னண்ணே ! போர் போர் தானே ! அதனல்தான் சொன்னேன் அவசரச் சட்டமின்னு......

கொண்டையன் : அதெப்படி உனக்குத் தெரியும் ?

கருப்பன் : அதைச் சொல்லத்தான் இப்போது நான் தூது போரேனே ! இந்தாப்பாரு ஓலையை...(விகடகவி ஓடிவருகின்றார்.)

விகடகவி : யாரப்பா ? இங்கே வா......

கருப்பன் : நீங்க யாரு ? .....உம் . ...கவி விகடர் நீங்கள் தானே......(உற்றுப்பார்த்தல்)

விகடகவி : ஆமாம் விகடகவி நானேதான்........

கருப்பன் : அப்படியானல் நீங்க பாருங்க......

விகடகவி : புதிய மந்திரியார் போருக்குத் தயார்போலிருக்கு...

கொண்டையன் : மந்திரி பழையவர்தானுங்க... . சபைதான் புதிது.........

விகடகவி : அதனல்தான் அவசரச்சட்டம் பிறக்கிறதோ ? சட்டமாம் சட்டம் ! அவசரச் சட்டம் !........(கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பாடிக்கொண்டு போகிறார்.)

பாட்டு

சட்டம்......அவசரச் சட்டம்
வாயைத் திறந்தாலே—சட்டம்
வயிற்றுக்கு கேட்டாலே—சட்டம்
சட்டம்......அவசரச்சட்டம்
தாய்மொழி சொன்னலே—சட்டம்
தன்மானம் வேண்டுமென்றல்—சட்டம்
சட்டம்......அவசரச்சட்டம்
நாட்டுரிமை கேட்டாலே—சட்டம்
நாலுபேர் சேர்ந்திருந்தால்—சட்டம்
சட்டம்......அவசரச்சட்டம்

காட்சி 23

(இடம் :—கட்டபொம்மன், அவை கட்டபொம்மன் மட்டும் நிமிர்ந்தும் குனிந்தும், சிந்தித்தபடி இருக்கிறன்.)

(மனம் பேசுகின்றது)

வெற்றியைத்தவிர வேறொன்றும்மறியாத வீரபாண்டியன் மனத்திலும் வேதனைக்குரல்! வெஞ்சமரிலே அஞ்சாது நின்று வீரப் போர்புரியும் வெற்றி வேந்தன் மனத்திலுமா ? வேதனைக் குரல் !

இருந்தமிழே உன்னல் இருந்தேன்! என்னருமைத் தமிழகமே உனக்காகப் போராடினேன் ! தமிழகத்தீர் ! உமக்கொன்று சொல்லுகின்றேன். தாழ்வகற்றும் மனப்பான்மை உமக்கே யின்றேல் அழிந்தொழிவீர் ! அழிந்தொழிவீர். ஐயகோ! தமிழகமே !

(சிந்திக்கின்றன்)

கட்டபொம்மனுக்கும் கட்டளையிட ஒரு காவலன் ! அவனுக்கும் அடக்கு முறைச்சட்டம். பச்சைரத்தம் பரிமாறும் பாண்டி நாட்டானுக்குப் பாதுகாப்புச் சட்டம்.

(சிந்திக்கின்றான்—பின்னும் மனம் பேசுகின்றது)

வீரபாண்டியா ! நீயே சொல் ? சிந்தித்துச் சொல் ; பகுத்தறிவைப் பயன் படுத்திச் சொல் உனக்கு எது வேண்டும், ...

பிறர் எச்சில் நச்சும் பேதையர் வாழ்வா ? அல்லது பிறர் பணிய வாழும் பேராண்மை வாழ்வா ? அன்னியர் அடிவருடி வாழும் அடிமை வாழ்வா ? அல்லது தன்னிகரில்லாத் தமிழ் வேந்தனுகும் தன்மான வாழ்வா ? அழிந்தொழியும் ஆட்சி வேண்டுமா ? அழியாத நிலையான புகழ் வேண்டுமா ? மடிந்தொழிந்து மண்ணாய்ப்போகும் உயிர் வேண்டுமா ? மானம் வேண்டுமா ? எது வேண்டும் ? எதுவேண்டும் ?

(பின்னணியில் திருப்பித்திருப்பி 'எதுவேண்டும் ?' என்ற குரல்)

மானத்தையும் வீரத்தையும் விற்று மண்ணில் வாழ நினைக்கின்றாயா ?

கட்டபொம்மன் : இல்லை...இல்லை......ஒருக்காலும் இல்லை.... மானம் இழந்த பின் இந்த மண்ணில் வாழமாட்டான் இந்த வீரபாண்டியன்.

[மனம் பேசுகிறது]

அப்படியென்றால் — அயர்ந்திருக்காதே எழுந்திரு — ஈட்டி முனையிலே பேட்டி காணச் செல் போ......போ......போ...........

கட்டபொம்மன் : (கடிதம் எழுதுதல்) "ஈட்டி முனையிலே பேட்டி......" (சிரித்தல்)

காட்சி 24

[லூஷிங்டன் பானர்மென் முதலியோர் அமர்ந்திருக்கின்றனர் கட்டபொம்மன் கடிதத்தை லூஷிங்டன் படிக்கிறான்.]

"பாராளும் வேந்தன் படையுடனன்றித் தனித்துக்காணும் பழக்கமில்லாதவன் ! அதிலும் பாண்டி நாட்டான் எவரையும் சென்று பார்க்கமாட்டான். வீரபரம்பரை வீணர்களிடம் உறவாட விரும்ப வில்லை. ஈட்டி முனையிலே பேட்டிகாண அழைக்கிறது"

இப்படிக்கு.

பானர்மென் :—யாரவன் ?......

லூஷிங்டன் :—வீரபாண்டியக் கட்டபொம்மன்... ..!

பானர்மென் :—ஈட்டி முனையிலே பேட்டி..... (சிரிக்கின்றான்) இல்லை...இல்லை !......வெடிமருந்துகளின் முன்னே அவன் வெஞ்சினக் கோட்டை ! துப்பாக்கிகளின் முன்னே அவன் துயரகீதம் !

......(சிரிக்கின்றான்)......

இன்னுமா ? எண்ணிப்பார்க்கவேண்டும் ! மன்னாதி மன்னரெல்லாம் நமக்கு மண்டியிட்டு சிந்தனை இன்றி வந்தனை கூறும் போது சந்நியாசி நம்மை எதிர்க்கின்றான். இனியும் விட்டு வைத்தால் நம் திட்டம்.

லூஷிங்டன் :—கெட்டுக் குட்டிச்சுவராக வேண்டுவதுதான் ! புறப்படட்டும் நமது படைகள் ! பொங்கட்டும் குருதியாறு......

பானர்மென் :—பீரங்கிகளின் ஒலி விண்ணைப் பிளக்கட்டும்..... பிணக்குவியல்கள் எங்கும் பெருகட்டும்.

லூஷிங்டன் :—சுதந்திரப்போர் தொடங்கும் அந்தச் சூராதி சூரர்களின் தலைகள் சூறாவளிக் காற்றிலே சுக்கு நூறாக்கப் படட்டும்......

பானர்மென் : தானம்......தானம்..... சமாதானம்...இல்லை.... ஒருக்காலும் இல்லை.

காட்சி 25

கட்டபொம்மன் :—தானம்......தானம்......சமாதானம்......ஒருகாலுமில்லை. உயிர்தானம் தான் . ...

(பின்னணி) நாயினும் கேடாய் செந்தமிழ் நாட்டார் நலிவதை நாம் கண்டும் ஓயுதல் இன்றி அவர் நலம்பேணி உழைத்திடல் நான் மறவேன்.

கட்டபொம்மன் :—ஆம்....நான் மறவேன்....நான்மறவேன்.... ஒருபோதும் மறவேன்,

(பின்னணி) தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் ; எமைநத்துவாயென எதிரிகள் கோடியிட்டழைத்தாலும் தொடேன்.

கட்டபொம்மன் :—வஞ்சகர் கொடுக்கும் லஞ்சத்தை ஒருபோதும் தொடேன்...தொடேன்

(பின்னணி) தமக்கொரு திமை என்று நற்றமிழர் எனை அழைத்திடில் தாவி இமைப்பினில் ஓடித் தரக்கடவேன் நான் இனிதாம் என் ஆவி.

கட்டபொம்மன் :—ஆம். தமிழர் சமுதாயத்திற்காக—திருவிடத்திற்காக—என் உயிரையும் பணயம் வைப்பேன்.

(பின்னணி) ஆனவென்தமிழர் ஆட்சியை நிறுவ அல்லல்கள் வரின் ஏற்பேன் ; ஊனுடல் கேட்டபினும் செந்தமிழ் நாட்டுக்கு உவப்புடன் நான் அளிப்பேன்.

(தொடரும்)

தேன் மொழி

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் ! இந்த பாழும் நன்றி கெட்ட உலகத்தில் வாழ ஆசைப்பட வில்லை, தேன் மொழி. காரிருள் நேரம், தேன் மொழி தோட்டத்துக்கு சென்றாள். தன் சகாக்களை கடைசி முறையாக பார்க்கச் சென்றாள். தன்னை இதுவரை, இந்த மேலும், கீழும் பார்க்கும் சமுதாயம் ஒதிக்கிவைத்த போது, வித்தியாசம் பாராட்டாமல் இன்முகத்துடன் தன்னுடன் நட்புகொண்ட அன்பு தோழிகளை மறக்க முடியுமா ? திடிரென்று ஓடினாள், பசுவின் முகத்தோடு முகம் வைத்து கண்ணீர் விட்டாள். கண்ணீர் பசுவின் மூக்கின் ஓரமாக வழிந்தோடியது. திரும்பி பாராமல் விடு விடுவென்று நடந்தாள். தோழியின் கண்ணீரைக் கண்டு, கண்ணீர்விட்ட பசுவை கவனிக்க அவளுக்கு நேரமேது! வானத்திலே மேக கூட்டங்கள் சந்திரனை மறைத்துக் கொண்டன. எங்கோ இரண்டுவிண் மீனின் ஜொலிப்பு. இடியும் மின்னலுமாக இருந்தது. வேகமாக நடந்தாள், மழை சோவென்று பெய்தது. மழை உடலைத்தான் நனைத்தது உள்ளத்தையல்ல ! ஆற்றங்கரை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஆனால், கவலையும், வேதனையும் அவளை நிலை தடுமாறச்செய்து விட்டது. அப்பா, அப்பா என்று கத்த நினைத்தாள் ஆனால், வார்த்தை வெளிவருவதற்கு பதில் ஏதோ முனுமுனுப்பு சப்தம்வந்தது. பைத்தியகாரிமாதிரி ஓடினாள். எவ்வளவு தூரம் ஓடியிருப்பாள் என்று அவளுக்கே தெரியாது. பலத்த மழை, இருட்டு இவையினால் எதிரில் உள்ள ஒன்றும் தெரியவில்லை. தேன் மொழியின் கண்பார்வை மங்கியிருந்தது. ஏதோ ஒன்றின் மீது முட்டிக்கொண்டு விழுந்தாள். அதுதான் அவளுக்கு தெரியும். அவள் கண் விழித்த போதுதான் ஒரு குடிசைக்குள் இருப்பதை உணர்ந்தாள். எதிரே ஒரு கட்டிளங்காளை நிற்பதை கண்டாள். என்ன செய்வது என்று தெரியாமல் எழுந்திருக்க முயன்றாள். அவன் பெயர் செவிராசன். ஆனால், அவனுக்கு காது சுத்தமாக கேட்காது. அவன் தொழில் மீன் பிடிப்பது. இந்த குடிசையில்தான் வசித்து வந்தான். விஷயங்களை ஆதியோடந்தமாக தேன்மொழிக்குவிளக்கினான்; அவள் ஓரளவுக்கு புரிந்து கொண்டாள். அவன் அவள்கையைபற்றினான். அவள் கையை இழுத்துக் கொள்ளவில்லை தன்னையும் இந்த உலகத்தில் விரும்பும்பிறவி இருக்கிறதே என்று பூரிப் படைந்தாள். சிற்றிடையாள் மண்ணிலே தேன்மொழி என்று எழுதி காட்டினாள், உடனே அவன் செவிராஜனுக்கு - தேன்மொழிதானே தேவை என்று அவளை இறுக அணைத்தான் அந்தஅணைப்பின் இன்பம் அவளை திக்கு முக்காடச் செய்தது. திருமணச் சின்னத்தை தேன்மொழிக்கு அளித்தான். தேன் மொழி விழியிலே கண்ணீர், ஆம். ஆனந்தக் கண்ணீர்! மருதை இதை எதிர்பார்த்திருப்பாரா ? இந்த சமயத்தில் தேன் மொழியால் தான் மருதையை மறக்க முடியுமா ? சுழலிலே சிக்கிய படகு கரை சேர்ந்தது !

வாழ்க செவிராசன்-தேன்மொழி!

[தாகூரின் கதையை தழுவியது.]

—வே. கோதை

விற்பனையாகிறது ! மிகச் சிறந்த புத்தகம் !

கவிஞர் கண்ணதாசன்

எழுதிய

ஈழத்துராணி

விலை ரூ. ஒன்று

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கமிஷன் தரப்படும். வேண்டுவோர் கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும்.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. ஒன்று M.O. அனுப்பவும்.

விவரங்களுக்கு :—

அருணோதயம்

சென்னை-14.

தொடர் கதை

அத்தியாயம் 3

அஞ்சலா, அவள் வயதுக் குறிய ஞானத்துடனும் அடக்கத்துடனும் தன் தாயின் பின்னுல் போய் பதுங்கிக்கொண்டாள். அவள் கண்கள் அடிக்கடி ஆக்டேவின் மீது விழுந்தன. அவன் சிறித்துக்கொண்டிருந்தான்.

அஞ்சலா வந்த சற்று நேரத்தில் காம்பர்டன்னும் வந்து விட்டார்.

அவரைக் கண்டவுடன் ரோசி,

"ஏங்க, அச்சில்லே—சொன்ன வேலை விஷயமாக ......!" என்று இழுத்தாள்.

"ரோசி! அந்த விஷயத்தை நான் மறந்தா போய்விடுவேன்?" என்று மனைவியிடம் கூறிவிட்டு ஆக்டேவைநோக்கி.

"பெரிய கடையொன்றில், பிரதம குமஸ்தா வேலையொன்று காலியாக இருக்கிறது. உங்களுக்கு அந்த வேலையை சிபாரிசு செய்யக் கூடிய ஆட்கள் என் வசம் இருக்கிருர்கள். உங்கள் வருகை தெரிந்தவுடன், அவர்கள் ஏற்பாட்டை செய்து முடித்து விடுவார்கள். இப்போது மணி நான்கு கூட ஆகவில்லை. நாம் போய் அவர்களைப் பார்த்து விட்டு வருவோமா?" என்ருர்.

ஆக்டேவ் தனது அலங்காரத்தை கவனித்துக்கொண்டான். கழுத்துப் பட்டி ஒரு பக்கமாக சரிந்திருந்தது. தலை கலேந்திருந்தது. ஆடை கவனக் குறைவால் அலங்கோலமாக இருந்தது.

அவன் செயலைக் கவனித்த திருமதி காம்பர்டன் "உங்களைப் பார்த்தால், நன்ருகத் தானிருக்கிறது. பிரத்தியேக அலங்காரம் எதுவும் தேவையில்லை." என்ருள்.

காம்பர்டன், தன் மனைவியின் நெற்றியை முத்தமிட்ட பின் அங்கிருந்து கிளம்ப தயாரானர். அன்னியோன்யத் தம்பதிகளுக்கு அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு என ஆக்டேவ் நினைத்தான்.

'போய்வருகிறேன் கண்ணே! குழந்தை! போய் வருகிறேன்!" காம்பர்டன் மனைவியிடமும் குழந்தையிடமும் உத்தரவு பெற்றுக் கொண்டார். "சாப்பாடு சரியாக ஏழு மணிக்கு—மறந்து விடாதீர்கள்!" என்று ரோசி ஞாபகப்படுத்தினுள்.

* * *

தெருவிலிறங்கி சற்று தூரம் நடக்கும் வரை காம்பர்டன் மௌனமாக இருந்தார். அவர் மனதில் ஏதோ எண்ணங்கள்.

அன்றைக்குப் பின், ஆக்டேவ் எதிர்பார்க்காத வகையில்.

"உங்களுக்கு காஸ்பரினைத் தெரியுமா? அவள்தான், நான் சொன்ன அக்கடையில் பெரிய உத்தியோகத்தில் இருப்பவள். நீங்கள்தான் பார்க்கப் போகிறீர்களே?" என்ருர் காம்பர்டன். ஆக்டேவின் ஆவல் மீண்டும் தலை தூக்கியது. "காஸ்பரின் உங்களுடனு வசிக்கிருர்?" என்ருன். காம்பர்டன் அதை விரும்பாதவர்போல், பேசத் தொடங்கினர்.

"இல்லை, இல்லை! என் மனைவிக்கும், காஸ்பரினுக்கும் ஒத்துவராது. இருவரும் ஒருவரை பார்க்கக்கூட மாட்டார்கள். நான் பார்க்கும்போது மட்டும் காஸ்பரினேடு கைகுலுக்குவேன். நீங்களே சொல்லுங்கள்! அதுகூட செய்யாதிருக்க முடியுமா என்ன? காஸ்பரினும் நல்ல நிலையில் இல்லை. பாவம். ரோசிக்கும், அவளுக்கும் மிடையில் நான் மத்தியஸ்தன். ஒருவர் விஷயத்தை மற்றவர்களுக்கு சொல்வதும் நான்தான்! இம்மாதிரி மனஸ்தாபங்களுக் கெல்லாம் காலந்தான் பதில் சொல்ல வேண்டும்! என்ருர்!

அவருடையகல்யாணத்தைப் பற்றி மேலும் பேசவிரும்பி. ஆக்டேவ் பேச்சை ஆரம்பித்தான். அதற்குள் அவர் சம்பாஷணைக்கே முடிவு கட்டி விடுவதுபோல்,

"நாம் நான் சொன்ன இடத்திற்கு வந்துவிட்டோம்!" என்ருர்.

அப்போது அவர்கள். பெரிய கடையொன்றின் முன்னுல் நின்றிருந்தார்கள்.

இரண்டு பெரிய சந்துகள் சேரும் முனையில் அக்கடை அமைந்திருந்தது. கடை ஜன்னல்களுக்கு நேர் மேலாக ஒரு பெரிய போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. "பெண்கள் ஸ்வர்க்கம்" ஸ்தாபிதம் 1882. இவ்வளவுதான் அதில் எழுதப்பட்டிருந்த விஷயம். காலத் தேய்வினுல் எழுத்துக்கள் மங்கலாக காட்சியளித்தன. கண்ணுடி ஜன்னல்களின் மீது நிர்வாகிகளின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

டல்ஹௌஸ் அண்டு ஹௌடின் கம்பெனி என்று, "நாகரீகத்திற்குத் தகுந்த கடையாக இல்லாவிட்டாலும் நாணயம் மிகுந்த கடையிது!" என்ருர் காம்பர்டன். ஆக்டேவ் பேசாமல் இருக்கவே மேலே தொடர்ந்தார் "ஹௌடின் முதலில் இங்கு குமாஸ்தாவாகத்தான் சேர்ந்தார். அவர் டல்ஹௌஸின் பெண்ணை மணம் புரிந்த சில வருடங்களில், டல்ஹௌஸ் இறந்து விட்டதால், கடை அவர் மேற்பார்வைக்கு வந்து விட்டது. இளந்தம்பதிகளான ஹௌடினும், அவர் மனைவியும் கடையை நன்ருகத்தான் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். இதர கூட்டாளிகள் இவர்களிடம் எதற்கும் வருவதே இல்லை. ஒதுங்கியே இருக்கிருர்கள். திருமதி ஹௌடின் மிகவும் கெட்டிக்காரி. சுயபுத்தி உள்ளவள்... வாருங்கள் உள்ளே போவோம்!"

ஹௌடின் வெளியே ஏதோ சாமான் வாங்கப் போயிருந்தார். கடையில் திருமதி ஹௌடின்தான் இருந்தாள். அவர்களை அவள்தான் முதலில் வரவேற்ருள். அவள் காதில் பென்சிலை வைத்துக் கொண்டு, ஏதோ கணக்கு போட்டுக் கொண்டிருந்த சமயம், அப்போது. அவளுடன் அப்போதிருந்த இரண்டு குமாஸ்தாக்கள் என்னவோ அவள் இட்ட வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர்.

ஆக்டேவ் அவளை நிதானமாக கவனித்தான். நல்ல உயரம் அழகான தோற்றம். கவர்ச்சி உடம்பின் எல்லா பாகத்திலுமிருப்பதாக அவனுக்குப்பட்டது. கறுப்பு நிற ஆடை அணிந்திருந்தாள். ஆண்களின் கழுத்துப் பட்டி, அவளை அணி செய்தது. புன்சிரிப்பு முகத்தில் தவழ, வார்த்தைகளை வீணுக்காமல் அவள், ஆக்டேவுடன் விஷயத்தைப் பேசி முடித்தாள். அவள் பேச்சுகூட வியாபார தோரணையிலிருந்ததை கவனித்தான் ஆக்டேவ்.

"நல்லது, நீங்கள் இங்கு வேலைக்கு வரப்போவதாக இருப்பதால், கடையின் எல்லா பகுதிகளையும் இப்போதே பார்த்து பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள்!" என்ருள் திருமதி ஹௌடின், ஆக்டேவிடம். காம்பர்டன் சற்றுத் தயங்கினர். அவர்

கண்ணீர் வடிக்கின்ருர்கள்; கவனிப்பீர்களா?

அடுத்து நடைபெறவிருக்கும் சென்னைசட்டசபைக் கூட்டத்தில் கொடுக்கல் வாங்கல் (லேவாதேவி) முறையை ஒழுங்கு படுத்தும் மசோதா ஒன்று கொண்டு வரப்படுமெனத் தெரிகிறது. சட்டசபை உறுப்பினர்களின் தன்மானத்திற்கு ஒரு சோதனைகாலம் வந்திருக்கிறது!

தமிழகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்ருலும் அல்லது எந்த வீதிக்குச் சென்ருலும் ஆங்காங்கே வடநாட்டு மார்வாரி-குஜராத்திகள் வட்டிக் கடைகள் வைத்திருப்பதைக் காணலாம். சட்டம் அனுமதிக்கவில்லையென்ருல் கூட அவர்கள் நாட்டு மக்களிடம் ரூபாய்க்கு ஒண்ணரை அணு விதம் அநியாயவட்டி வசூலித்து வருகிருர்கள். இது சர்க்காருக்குத் தெரியாததல்ல. இத்தகைய மார்வாரிச் சுரண்டலைத் தாங்க முடியாத பலநூறு குடும்பங்கள் சொத்துச் சுகங்களையெல்லாம் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ருர்கள்.

எனவே லேவாதேவி மசோதா விவாதத்திற்கு வரும்போது தன்மானமுள்ள எல்லா கட்சி சட்டசபை உறுப்பினர்களும் இந்த மார்வாரிச் சுரண்டலை அம்பலப் படுத்தித் தீரவேண்டும். இன்றைய சட்ட சபை அந்த மார்வாரிகளை வெளியேற்ற முடியாது என்பதை நாம் நன்குணர்வோமாயினும் 'அநியாய வட்டி' 'சட்டபுறம்பான வட்டி' இவைகளுக்கேனும் முற்றுப் புள்ளி தேவை என்பதை மறந்துவிடக் கூடாது.

வடநாடு-தென்னுடு என்ற பேதத்தை 'விடாப்பிடியாக' மறந்துவிட்ட நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் சட்டசபையில் மார்வாரிச் சுரண்டலை எதிர்த்துப்பேசியாவது மானத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்றே நம்புகிருேம்.

ஆக்டேவைத் தொடர்ந்து போய் சுற்றுவது அவ்வளவு நன்றாக இராதல்லவா?

“நீங்கள் போஙகள்...நான் சாப்பாட்டுக்கு போகும்போது வந்து கூப்பிடுகிறேன்!” என்று ஆக்டே-விடம் காம்பர்டன் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஆக்டேவ் கடையின் எல்லா பாகங்களையும் சுற்றிப்பார்த்து,தெரியாத விஷயங்களை கேட்டுத் தெரிந்து கொண்டான். ஏழு மணி அடிக்க பதினைந்து நிமிஷங்கள் இருந்தன. “காம்பர்டன் உங்களுக்காக காத்திருக்கிறார்!” என்று யாரோ சொன்னதின் பேரில் ஆக்டேவ் அங்கிருந்து கிளம்பினான். மாடிப்படி இறங்கி வரும்போது துணிக் கட்டுகள் வரிசையாக அடுக்கப் பட்டிருக்கும், ஒரு இடத்தை தாண்டித்தான் வெளியே வர வேண்டும். ஆக்டேவ் அங்கு வந்தபோது, காம்பர்டன், காஸ்பரினோடு அளவளாவிக் கொண்டிருந்தது, கேட்டது. அவன் அங்கேயே நின்று விட்டான்.

“நான் வேண்டுமானால் சத்தியம் :செய்கிறேன்.......அது நிஜமல்ல!” என்றார் காம்பர்டன் தன் நிலையை மறந்து உரத்த குரலில்.

இரண்டு நிமிஷ மௌனம்.

“எப்போதும் இருக்கிற மாதிரிதான் இருக்கிறாள். நோய் வருகிறது போகிறது... அவள் மீண்டும் குணமாவதென்பது நடக்காத காரியம்!” என்றார் காம்பர்டன்; பேச்சு ரோசியை பற்றியதாக இருந்தது.

“என் அன்பான சிநேகிதரே, உங்கள் விஷயத்தில் தான் நான் மிகவும் பரிதாபப் படவேண்டியிருக்கிறது. ஆனால் நீங்கள் எதையும் சமாளித்துக் கொள்ளுவீர்கள். அவளிடம் சொல்லுங்கள்... நான் அவள் உடல் நிலையைப் பற்றி மிகவும் விசாரித்தேனென்று!......”

அவள் சரியாகக்கூட முடிக்கவில்லை. காம்பர்டன் அவளை தன் பக்கத்தில் இழுத்தணைத்து, அவள் உதடுகளில் முத்தம் பதித்தார். அவள் பதிலுக்கு அவரை அன்போடு முத்தமிட்டாள். அங்கிலே கலையுமுன்னர்,

“உங்களால் முடிந்தால், நாளை காலையில் வாருங்கள். நான் படுக்கையில்தான் இருப்பேன். கதவை மெதுவாக மூன்று தடவை தட்டுங்கள்” என்றாள் காஸ்பரின் தன் காதலரிடம்.

எதற்கு அவரை வரச் சொல்கிறாள், என்பது ஆக்டே

அதற்கு மேலும் அங்கு சும்மா நின்று கொண்டிருக்கவில்லை, ஆக்டேவ். தன் வரவை அறிவிக்க மெதுவாக கனைத்தான்.

இந்த ஆச்சர்யத்திற்கு மேல் இன்னொரு ஆச்சர்யமும் காத்திருந்தது. காஸ்பரின் மிகவும் இளைத்து விட்டிருந்தாள். அவளது முந்திய தோற்றத்திற்கும், இப்போதைய நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்? கண்களில் மட்டும் அதே கவர்ச்சி இருந்தது. மற்றவர்கள் கண்டு பொறாமைப்படக்கூடிய நெற்றி, வாய், கண்கள், மார்பகங்கள்- ஆகிய இவைகள்தான் காம்பர்டனை, மிகவும் வசீகரித்திருந்தன. ரோசி இவ்வளவு அழகியாகவா இருந்தாள்? அப்படிப்பட்டவள் இப்போது...!

ஆக்டேவைப் பார்த்து அதிர்ச்சி அடையாமல் காஸ்பரின், அவனை வரவேற்றாள். பழைய நாட்களைப்பற்றி கொஞ்ச நேரம் பேசினாள். காம்பர்டனும், ஆக்டேவும் புறப்பட்டபோது, காஸ்பரின் அவர்களுடன் கை குலுக்கி வழியனுப்பினாள். திருமதி ஹௌடின், ஆக்டேவிடம், “நாளைக்கு...வந்துவிடுங்கள்!” என்று சொன்னாள். எதற்காக? வேலைக்குத்தான்.

* * *

காம்பர்டனும், ஆக்டேவும் தெருவில் இறங்கி நடந்தார்கள். தெரு ஒரே சந்தடியாக இருந்தது. ஆக்டேவினால் பேசாமல் இருக்க முடியவில்லை. திருமதி ஹௌடின் மிகவும் அழகாக இருப்பதாக விமர்சனம் செய்தான். அதைத் தொடர்ந்து பலவிதமான பேச்சுக்கள்.

பாதை பூராவும் கடைகள் மிகவும் அலங்காரத்துடன் காட்சியளித்தன. பணமிகுந்தவரின் கடை சற்று பகட்டாக இருந்தது. பணமில்லாதவரின் நிலை, கடையைப்பார்த்தே தெரிந்துகொள்ளலாம். ஜனக் கூட்டம் இரண்டு கடைகளிலும்தான் இருந்தது.

பேசிக்கொண்டே வந்ததால் நடந்த சிரமம் தெரியவில்லை. எளிதில் வீடடைந்தனர். அவர்களுக்காக பலர் ஏற்கனவே அங்கு காத்துக்கொண்டிருந்தனர்.

திருமதி காம்பர்டன் பட்டாடை அணிந்துகொண்டு, விருந்துக்கு தயாராக இருந்தாள். இப்போது அவள் முகத்திலும் கொஞ்சம் தெளிவு இருந்தது. காம்பர்டன், அவளைக் கண்டவுடன் அருகே போய் முத்தமிட்டார். காண்பவருக்கு, மனைவி மீது அவருக்கு கொள்ளை ஆசை போலிருக்கிறது என்று நினைக்

விருந்து ஒரு மாதிரியாக முடிந்தது. ஆக்டேவின் வரவிற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவ்விருந்து சாதாரணமாகத்தான் இருந்தது. எல்லாம் முடிந்தவுடன் திருமதி காம்பர்டன் மிகவும் களைப் படைந்தவளைப் போல் காட்சி அளித்தாள். கொஞ்சம், கொஞ்சமாக அவள் விலகிப்போய் ஒரு சோபாவில் சாய்ந்தாள். உண்மையில் அவள் உடல்நிலை அவ்வளவு மோசமாகத்தான் இருந்தது.

“உடம்பு சரியாக இல்லையா, என் கண்ணே?” கணவர் விசாரித்தார்.

“இல்லை...அப்படியொன்றுமில்லை! எப்போதும் இருக்குமே அப்படித்தான் இருக்கிறது!...” என்று கூறிவிட்டு அவரை அன்புடன் பார்த்தாள் ரோசி.

“அவளைப் பார்த்தீர்களா போன இடத்தில்......?”

“பார்த்தேன்...உன் உடல் நிலையைப்பற்றி மிகவும் விசாரித்தாள்!”

ரோசியின் கண்களில் நீர் கசிந்தது.

“அவள் நல்லவள்........ கொடுத்து வைத்தவள்” என்று ரோசியின் வாய் முணுமுணுத்தது. காம்பர்டன் அருகில்வந்து, மற்றவர்களைப் பற்றிய அக்கரை சிறிதும் இல்லாமல்...அவளை முத்தமிட்டார்.

“பார்த்தாயா.......அழுது, அழுதுதானே உன் நிலையை மோசமாக்கிக் கொள்ளுகிறாய்? நான் உன்னை எப்படி நேசிக்கிறேன் என்பது உனக்கே தெரியும்........ இருந்தும் ஏன் இப்படி அலட்டிக்கொள்ளுகிறாய்?” மீண்டும் முத்தங்கள்.

ஆக்டேவ் ஜன்னலருகே ஒதுங்கி, வெளியில் நடப்பதை கவனிப்பவன்போல, நின்று கொண்டிருந்தான். ஆனால் உண்மையில் அவன் எண்ணமெல்லாம் காம்பர்டன் தம்பதிகள் மீதுதான் இருந்தது. கடையில் நடந்த விஷயத்தை ரோசி யூகித்துக்கொண்டாள் போலிருக்கிறது, என்று அவன் நினைத்தான். ஆனால் அவள் முகத்திலிருந்து ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை அவனால். அமைதியாக அவள் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தது, ஆக்டேவை என்னென்னமோ நினைக்கச்செய்தது. தன் இன்ப வாழ்வில் ஏற்படும் இடர்களைப்பற்றி அவள் கவலைப் பட்டுக்கொண்டதாக காட்டிக் கொண்டால் மட்டும் போதுமா? அதனால் துன்பம் தூர விலகினால் அல்லவா தேவலை! அவள் இருக்கும் நிலையில் இன்பம் ஏற்பட்டால், அவன் அதை ஏற்கத்தயார்.

நேரம் ஆகியது. ஆக்டேவ் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தன் அறைக்குத் திரும்பினான். அவன் கையில் ஒரு மெழுகுவத்தி இருந்தது. அறைக்கு வெளிச்சம் வேண்டாமா? மாடிப்படி ஏறவில்லை. தட, தட வென்ற சப்தத்தோடு புத்தாடைகள் சலசலக்க யாரோ வந்தது கண்டு விலகி வழி விட்டான். நான்காவது மாடியில் வசிக்கும் பெண்கள் தங்கள் இருப்பிடத்திருக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

முதலில் வந்தவள் திருமதி ஜோஸ் ராண்டு. அவளுக்குப் பின்னால் அவளது குமாரிகள் இருவர். எங்கோ விருந்தில் கலந்து கொண்டுவிட்டு வருபவர்கள், போலிருந்தது அவர்களின் அப்போதைய வேகம். ஆக்டேவை கடந்து செல்லும்போது ஜோஸ் ராண்டு, அவனை உற்றுப் பார்த்தாள். பெண்களில் மூத்தவள் தலை குனிந்தவாறு நடந்தாள். இளையவள், அவனைப் பார்த்து ஒரு புன்னகை உதிர்த்தாள். மெழுகுவத்தி வெளிச்சத்தில் அவள் முகம், ஆக்டேவுக்கு நன்றாகத்தெரிந்தது. உருண்டையான வடிவத்தில் இருந்த அவள் முகம் யாரையும்எளிதில்கவரும்சக்தியைப் பெற்றிருந்தது. அவள் கூந்தல் மெழுகுவத்தி வெளிச்சத்தில்கூட பளபளவென மின்னிய அவளது ஏனைய அலங்காரமோ, சென்று வந்த இடம், மிகவும் பெரிய இடம் என பறை சாற்றிக் கொண்டிருந்தது. சகஜமான பெரிய இடங்களுக்குச் செல்லும் குணமான பெண்களே இவ்வித அலங்காரங்களோடு செல்வார்கள் நாட்டியமாட! அப்படியானால் இவள்? அந்த கோஷ்டி அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டது. ஆக்டேவ் தயங்கியவாறு சற்று நேரம் இருந்து விட்டு மெதுவாக படியேறினான். அவளுடைய கண்கள் சுண்டி இருந்ததை அவனால் எளிதில் மறந்துவிட முடியவில்லை. மாடிப்படியில்கூட விளக்கு வெளிச்சம் அதிகம் இல்லை.

ஆக்டேவுக்கு தூக்கம் பிடிக்க வில்லை; இப்படியும் அப்படியுமாக புரண்டு படுத்தவாறு இருந்தான். அன்று அவன் கண்ட புது முகங்களைப் பற்றி மனம் தீவிரமான ஆராய்ச்சியில் இறங்கி இருந்தது. காம்பர்டன் தம்பதிகள் இவனிடம் ஏன் இவ்வளவு மரியாதையுடனும், அன்பாகவும் நடந்துகொள்ளுகிறார்கள்? ஒரு வேளை தங்கள் மகள் அஞ்சலாவை, பிற்காலத்தில் அவனுக்கு மணம் செய்து கொடுத்து விடலாம் என்று எண்ணம் வைத்துக்கொண்டிருக்கிறார்களா?

(தொடரும்)



‘இலக்கியத்தில் காதல்’ வேண்டுமா? வேண்டாமா?

‘‘இலக்கியத்தில் காதல்’’ பற்றி, பலரது கருத்துக்களையும் கேட்டிருந்தோம். வந்தவற்றில் சிலவற்றை, விருப்பு வெறுப்பின்றி வெளியிட்டுள்ளோம்.

1. சொ. சி. சந்திரோதயன், உட்லண்ஸ் ஒட்டல், சென்னை 4.

‘‘தென்றலில் வரும் ‘இலக்கியத்தில் காதல்’ அவசியமற்றது....அறிவியக்கத்தார் காதலையும் கற்று இருப்பார்கள். ஆகையால், அறிவைப்புகட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.’’

* * *

2. தேவராஜன், 131, பெரிய தெரு, சென்னை 5.

‘‘தென்றலில் மிகவும் ரசித்து படிக்கப்படும் பகுதியை யாரோ சிலர் என்ன காரணத்தாலோ - எண்ணக் கோளாறுதானிருக்கும்-வேண்டாம், என்று சொல்வதற்காக நிறுத்த வேண்டாம் ‘‘ஏற்றதொரு கருத்தை’’ உமது இதழ் மூலம் தொடர்ந்து சொல்க.’’

* * *

3. பொ. சந்திரகாசன், வடசேரி, நாகர்கோயில்.

‘‘உணலிறுமுண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது’’
‘‘உப்பமைந் தற்றூர் புலவி யது சிறிது
மிக்கற்று னீள விடல்’’

என்ற வகையில், காமத்துப் பாலுக்கு வரம்பு கட்டியிருக்கும் வள்ளுவரது கருத்துக்களை தொகுத்து ‘இலக்கியத்தில் காதல்’ பகுதியை வரைய வேண்டுகிறேன்.’’

* * *

4. தமிழ்ப்பித்தன், மதுரை.

‘‘இலக்கியத்தில் காதல் இல்லாத ஒன்றல்ல. வாழும் உயிர்க்கு அது இன்றியமையாததுமாகும். அதை வேண்டாம் எனக் கூறுவது விவேகிகளின் செயலல்ல. காதலின் தன்மையறியாதார் கூற்றினை ஏற்கவேண்டாம். தொடர்ந்து வெளியிடுக.’’

* * *

5. ஏ. முனுசாமி, பேப்பர் கடை, 31, வில்லேஜ் ரோடு, சென்னை 6.

[கே. ஆர். ராகவன், எம். மாயான்டி, எம். ராமன், ஜி. லட்சுமி நாராயணன், டி. பி. லோகநாதன், ரஹமதுல்லா மற்றும் சிலரது கையொப்பங்களுடன்]:—

‘‘தென்றலில் வரும் இலக்கியத்தில் காதல் எனும் பகுதி இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். உவமை நயம் போதும்.’’

* * *

6. பாண்டியன்; தல்லாகுளம், கூடல் மாநகர், மதுரை.

‘‘இலக்கியத்தில் காதல் பகுதியை யாரோ சிலர் வேண்டாம் என்று கூறுவதாக எழுதியிருப்பதைப் பார்த்து மிகவும் வருந்துகிறேன். புலவர் அவர்கள் அவரது இனிமையான நடையில் மேலும் ‘ஆழமாக’ இருபக்கங்கள் எழுதுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து நீக்க வேண்டாம்.

* * *

7, ஜி. நாராயணமூர்த்தி, 41, கிலாரி ரோடு, பெங்களூர்.

‘‘இலக்கியத்தில்காதல் பகுதி தொடர்ந்து இருக்கட்டும். ஆழமாக இருக்கட்டும். உவமை நயம் ததும்பட்டும். தெள்ளு தமிழில் தொடர்ந்து தீட்டுங்கள். விட்டிடாதீர்’’

* * *

8. எழிலன்பன், மைலாப்பூர், சென்னை 4.

‘‘குறளில் காதலுக்காக காமத்துப் பால் இருக்கும் போது தென்றலில் ஏன் ‘இலக்கியத்தில்’ காதல் இருக்கக்கூடாது? வாழ்க்கையில் மிக முக்கியமான கட்டம் காதல்! தங்கள் நடை கொஞ்சம் ‘‘ஓவர்’’ தான்! இருந்தாலும் பரவாயில்லை...அந்தப் பகுதி அதே சுவையுடன் தொடரவேண்டும்.’’

* * *

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்னிக் கொண்டிருக்கின்றன. ஆனால், எமது தலைவனாகிய அதியமானின் வேல்களோ பகைவர்களைக் குத்திக்கிழித்த காரணத்தால் முனை முறிந்து கொல்லனுடைய உலையில் செப்பனிடப் படுவதற்காகக் கிடக்கின்றன,’’ எனக்குறிப்பிட்டார். தொண்டைமானின் படைக்கருவிகள் புதிதாக உள்ளன என்பதால், அவன் போர்பயிற்சி இலலாதவன் என்பதும், அதியமானின் படைக்கருவிகள் உலைக்களத்திலே உள்ளன என்பதால், அவன் படைப்பயிற்சி மிக்கவன் என்பதும் பெறப்படுகின்றன. அத்தகையோனுடன் போரிட்டால் தொண்டைமான் மாய்வது உறுதி என்பதையும் குறிப்பாக அவனுக்கு உணர்த்தினர் ஔவையார். தொண்டைமானை இழித்துக் கூறினால் தனக்கு ஏதேனும் இடையூறு நேரக் கூடும் என்பது தெரிந்திருந்தும் துணிந்து கூறியது புலவரின் உள்ளத் திண்மையையே காட்டுகிறது. ஔவையாரின் இச்செயல்,

‘‘இறுதிபயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது’’

என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாகவே திகழ்கிறது.

இன்னோரன்ன பல சிறப்புமிக்க செயல்களை மேற்கொண்டு அக்கால அரசியலைச் செங்கோல் நெறியினின்றும் பிறழாது காத்தார்கள் பழந்தமிழ்ப்புலவர்கள். இன்றும் நாட்டு நன்மையில் கருத்துக்கொண்ட அறிஞர்கள் அரசாங்கத்தின் தவறுகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டித்திருத்த முயலுகின்றார்கள். ஆனால், அறிவுடைப் பெரு மக்களின் செம்மை சான்ற சொற்களைச் செவி மடுக்கும் சிறந்த பண்பு தற்கால அரசியலார்க்கு இல்லாதிருப்பது இரங்கத்தக்கதே யாகும்!

இல. காளியப்பன்.

வெற்றி வெற்றி! வெற்றி!

அக்டோபர் 2உ முதல் எமது மகத்தான 2-வது வாரம்! குலுங்க குலுங்கச் சிரிக்க வைக்கும் குதூகலச் சித்திரம்!

டைரக்ஷன்: N. ஜகந்நாத், பி,ஏ.

பத்மினி, ராகினி, மனோஹர், தங்கவேலு, பிரண்ட் ராமசாமி, மாலி, ராகவன், வாதிராஜ், கே. ஆர். செல்லம்.

கதை, வசனம்: தோட்டக்கார விஸ்வநாதன்

ஸ்டுடியோ: வாஹினி

வைத்தியா பிலிம்ஸ், 100, யுனைடெட் இந்தியா காலனி, மதராஸ்-24.

கொற்றத்தார்க்கு, நெருங்கிய சுற்றத்தார்!

புலவர்என்னுஞ்சொல் ஆன்று
அவிந்து அடங்கிய கொள்
கையினை உடைய சான்றோர்
களையே குறிக்கும். இச்சொல்
தமிழகத்தில் தமிழறிஞர் பெரு
மக்களைக் குறிப்பிடும் என்று
சொல்ல வேண்டுவதில்லை. அட
ங்கியஎன்று கூறுவதால் தமிழ்ப்
புலவர் பெருமக்களுடைய
ஆன்ற அறிவு நம் தமிழ் உல
கிற்கு எவ்வழியிலும் பயன்பட
வில்லை என்று நாம் கருதிவிடக்
கூடாது. புலவர் பெருமக்கள்
பண்டைக் காலத்தில் ஆற்றிய
பணிகள் அளப்பரியன. அவற்
றுள் மிக மேம்பட்டனவாகிய
அரசியல் பணிகளை ஈண்டுக்
காண்போம்.

'இவர் நம்பவர்' எனக் கோல்
கோடாமலும், 'இவர் பிறர்'
எனக் குணம் கொல்லாமலும்,
யார் மாட்டும் தோய்ந்து முறை
செய்துவாழ்ந்த மன்னர்களை
இப்புலவர் பெருமக்கள் வான்
மீதிருந்து இவ்வுலகின் இருளகற்
றும் வெங்கதிர்ச் செல்வன்
போலவும், மேலைத்திக்கில்
தோன்றித் தன்னுடைய குளிர்
ச்சி பொருந்திய ஒளிக்கதிர்க
ளால்மக்களைமகிழ்விப்பதுமாகிய
திங்கள் போலவும் இவ்வுலகின்
கண் நின்று நீடு வாழிய!' என
வாயார வாழ்த்தினர். என்றும்
ஏகாப்புகழ் படைத்த பாமாலை
களால் பாடி மகிழ்ந்தனர். இத்
துடன்மட்டும் அவர்கள் அமைந்
தார்களில்லை. மன்னர்கள்
நெறி பிறழ்ந்த காலத்தில் புலவர்
கள் அவர்களுக்கு நல்லறிவூட்டி
அவர்களை நன்னெறியில் செலு
த்தி வந்தார்கள். அரசர்கள்
தங்கள் தலையாய கடமையினை
மறந்த பொழுதெல்லாம் புலவர்
கள் அவர்களிடம் சென்று
அவர்கள் செய்ய வேண்டிய
வற்றை அவர்களுக்குநினைவூட்டி
வந்தார்கள். பாண்டிய மன்
னன் ஒருவனுக்கு நாடு சேர்க்
கும் நச்சு எண்ணம் தோன்
றிற்று. எனவே அம்மன்னன்
தன்னுடைய நாட்டுமக்களின்
நலனைப் பேணாது விடுத்துப்
படையைப் பெருக்குவதிலேயே
கண்ணுங் கருத்துமாக இருந்து
வந்தான். இதனை அறிந்த புலவர்
ஒருவர் நாட்டு மக்களின் நிலை
என்னவாகுமோ என அஞ்சி
னார். உடனே மன்னனைக்காண
மாளிகை நோக்கி விரைந்தார்.
அங்கு மன்னனைக் கண்டு, 'அர
சர் பெரும் நால்வகைப் படை
களும் ஒரு நாட்டிற்கு இன்றிய
மையாது வேண்டப்படுப
வையே; ஆனாலும் அப்படைக
ளால் மாத்திரமே ஓர் அரசன்
வெற்றி மேம்பட்டு விளங்கமுடி
யாது. மாறாக அறநெறியோடு
கூடி மாட்சிமைப்பட்ட ஒருமன்
னனுடைய கொற்றமே இவ்வுல
கில் சிறந்து விளங்க முடியும்.
அதனால் முதற்கண் நீ உன்னு
டைய நாட்டு மக்களின் வாழ்
வினை வளம்பெறச்செய்வாயாக

இல்லாதவர்கள் உன்னுடைய
நாட்டில் இல்லையாகச் செய்வ
துவே உனது தலையாய கடமை
ஆகும்' என அறிவுரை கூறினர்
இதுகேட்ட மன்னன் மனம்
திருந்தினான். மக்கள் வாழ்வு
மலர்ந்தது; புலவர் பெருமகனின்
எண்ணமும் ஈடேறிற்று. இத்த
கைய ஒப்பற்ற பணிகளையும்
அக்காலப் புலவர் பெருமக்கள்
செய்து வந்தார்கள்.

அரசியலார் தவறான வழியில்
செல்லுகிறார்கள் என்பது நன்கு
தெரிந்திருந்தும் அவர்களைத்
தடுத்து நிறுத்த முயலாது
வீணே காலங்கழிக்கின்றனரே
நாது வழியரைப் போர்களா
கிய பாராளுமன்ற உறுப்பினர்
சிலர். இதுபோன்ற பண்பற்ற
வாழ்க்கையினைப் பண்டைப் புல
வர்கள் மேற்கொண்டார்க
ளில்லை. நாட்டு நலனிலே கருத்
துக் கொண்ட நல்லவர் பலர்
"அரசியலாரின் இச்செயல்
தீயது. ஆகவே இதை உடனடி
யாகக் கைவிட வேண்டும்"
என எடுத்து இயம்புகிறார்கள்.
ஆனால் ஆட்சி மன்றத்திலே வீற்
றிருக்கும் ஆளை மிக்கோர்
சிலர் "மக்கள் கூறுகிறார்கள்
என்பதற்காக ஒன்றைச் செய
லாற்றாது விடுதல் கூடாது"
எனச் செருக்குடன் மறுமொழி
கூறித் தங்களுடைய எண்ணத்
தையே நிறைவேற்ற விரும்பு
கிறார்களேயன்றி, மக்களையும்
மக்களின் அறிவையும் மதிக்க
வில்லை. மக்களின் எண்ணங்களை
எடுத்துச் சொல்வதற்காக, மக்க
ளிடமே கூலி பெற்றுச் சென்
றுள்ள 'அறிஞர்பெருமக்களுள்'
சிலர் இது குறித்து எந்தவிதக்
கவலையும் கொள்ளாது வீணே
வாழ்கின்றனர். இது போன்ற
ஒரு இழிநிலையினைப் பண்டைத்
தமிழர் வரலாற்றில் நாம் எங்
குமே காணமுடியாது. இதற்
குக் காரணம் அன்று வாழ்ந்த
புலவர் பெருமக்கள் நாவீறு
படைத் திருந்ததையே ஆகும்.
மக்களிடம் எந்தவிதக் கூலியும்
பெறாத இப்புலவர்கள், மக்க
ளுக்கு மாறாக அரசன் நடக்கத்
தொடங்கினால் அதை அப்பொ
ழுதே தடுத்து நிறுத்தி மக்களை
வாழ்வித்தார்கள்.

பாண்டியன் அறிவுடை நம்பி
என்ற அரசன் தன் குடிகளி
டத்து இறை (வரி) வாங்கும்
முறையில் தவறி நடக்கத்
தொடங்கினான். அவனைச்சூழ்ந்த
அரசியல் சுற்றத்தார் அவனை
இடித்துக் கூறி நெறிப்படுத்தும்
திறமையற்று அவனுடைய
செயலுக்கு உடன்பட்டுநின்ற
னர், நமது பெரு மக்களில் சில
ரைப்போல. மன்னனின் வல
லாளர் மக்களைப் பலவாறு துன்
புறுத்தி இறைபெற்று வந்தனர்.
இதுகண்ட பிசிராந்தையார்என்ற
தண்டமிழ்ப் புலவர் உள்ளம்
உடைந்தார். தாமும் அக்குடி
மக்களுள் ஒருவர் என்பதை
உணர்ந்தார். அதே நேரத்தில்,
அரசனிடம் பரிசில் பெற்று
வாழும் அவருடைய உள்ளத்தில்
'அரசனுக்கே அறிவுரை கூறப்
போனால் என்னுடைய வாழ்வு
என்னவாகும்?' என்ற எண்ணம்
சிறிதும் எழவில்லை. குற்றம்
யாருடையதாயினும் எடுத்துக்
காட்டித்திருத்துவதே தம்முடை
யகடமை என அவர் எண்ணி
னார். அப்பொழுதே அரசனைக்
காண அரண்மனையை அடைந்
தார்; மன்னனைக் கண்டு "மன்
னவ; ஒரு சிறு பகுதி வயலிருக்
கிறது. அதில் விளையும் நெல்லை
ஒழுங்காக ஓரிடம் கொண்டு
சேர்த்துப்பின்னர் அதனை அரிசி
யாக்கி அட்டு (சமைத்து) அச்
சோற்றைக் கவளம் கவளமாக
உருட்டி யானைக்கு இட்டால்
அச் சிறு நிலத்தில் விளைந்த நெல்
லும் யானைக்கு நீண்ட நாட்கள்
உணவு கொடுக்க பயன்படும்.
அதை விடுத்துப் பெரு நிலப்பரப்
பில் நெற்கதிர்களின் சுமை தாங்
காது படிந்து கிடக்கும் பயிர்க
ளினுடே யானையொன்றைத்தனி
யாக மேயவிட்டால் அது தின்ப
தைவிட அதன் காலடியில் பட்டு
வீணாகும நெல்லின் அளவேமிகு
தியாகும். அதுபோன்று, ஒரு
மன்னன் மக்களிடம் இறையினை
முறையறிந்து அளவோடுகொள்
வானாயின் அவனுடைய நாடு
செல்வச் செழிப்புற்று விளங்
கும். அவ்வாறின்றி மக்களைத்
துன்புறுத்தி மிக்க வரி வாங்கத்
தொடங்குவானாயின் அவனுக்
கும் பொருள் சேராது. யானை
புகுந்த விளைநிலம்போல அவ
னுடைய நாடும் கெட்டழியும்"
என அறிவுரைகூறி மன்னனின்
கடமையினை உணர்த்தினார். நம்
பியும் சிறந்த அறிவுடையவனாத
லால் தன்குறையினை உணர்ந்து
திருந்தினான். நாடு மீண்டும் நல
முற்றது. இதுவும் புலவனின்
மாண்புறு செயலன்றோ!

பண்டைக்காலப் புலவர்கள்,
வழியுரைப்போர் (தூதுவர் or
Ambassador) பணியையும்
ஏற்றுத்திறம்படச் செயலாற்றி
னார்கள்: தற்காலத்தில் இப்பணி
யைப் பெண்கள் ஏற்றுக்கொள்
வதை வியப்பாகக் கருதுகிறோம்.
இதே பணியினை ஏறத்தாழ 2000
ஆண்டுகளுக்குமுன்னர் வாழ்ந்த
ஔவையார் என்னும் பெண்
பாற்புலவர் ஏற்று மிகவும் திறம்
படச் செய்து முடித்திருக்கிறார்.
தொண்டைநாட்டை ஆண்ட
வேந்தன் தொண்டைமான்
எனப்பட்டான். அதியமான்
காலத்தே தொண்டை நாட்டை
ஆண்ட தொண்டைமான் அதிய
மான்பால் பகைமை கொண்டு
அவனோடுபோரிட எண்ணினான்.
அவனது அறியாமையை அறிந்த
அதியமான், வலிமிக்க தன்னோடு
போரிட எண்ணும் தொண்டை
மான் அழிவதன் உறுதியையும்;
போரின் கொடுமையால் நாடு
அடையும் கேட்டினையும் அவ
னுக்கு உணர்த்தும் பொருட்டு
ஔவையாரை அவன்பால் தூது
விட்டான். தொண்டைமான்
தூது வந்த ஔவையாரைத் தன்
படைக்கலக் கொட்டிலுக்கு
அழைத்துச் சென்று காட்டி
னான். அது கண்ட ஔவையார்
மன்னனிடம்; "மன்னவ, உன்
னுடைய படைக்கருவிகள் நெய்
தடவப்பெற்று பள பளவென

[11-ம் பக்கம் பார்க்க]

ஆடம்பரமான ஒரு ஹோட்டலில் ஒரு வார காலத்
தைக்கழித்த ஒரு பிரயாணி வார முடிவில் பில்
தொகைக்கணக்கு வந்ததும் ஒவ்வொன்றாக சரி பார்த்
தார். எல்லாம் சரியாக இருந்தது. ஆனால் கடைசியில்
ஒரு "5 ஷில்லிங்" எதற்கு போடப்பட்டுள்ளது என்று
தெரியவில்லை. மானேஜரிடம் கேட்டதற்கு அவர் அது
"ஸ்டேஷனரி" செலவு என்றார். பிரயாணி கோபமாக
நான் "ஸ்டேஷனரி" எதுவும் உபயோகிக்கவில்லை
என்று கண்டிப்பாகக் கூறினார்.

மானேஜர் "அது இந்த பில் எழுதப்பட்டிருக்கும்
பேப்பரின் கிரயம்" என்றார் சாவதானமாக!

....

ஒரு சர்க்கார் ஆபீஸ் குமாஸ்தா தன் காலை
உணவை அருந்திவிட்டு, பத்திரிகை படிப்பதில் ஆழ்ந்
திருந்தார். சுமார், ஒரு மணி நேரத்திற்குமேல் கழிந்து
விட்டது. தன் மனைவியைக் கூப்பிட்டு இன்னொரு கப்
காப்பி கொடுக்கும்படி சொன்னார்- 'காப்பியா",
மணியைப்பாருங்கள் நீங்கள் இன்று ஆபீஸுக்கு போக
வில்லையா' என்று கேட்டாள், அவள்!

திடுக்கிட்டு எழுந்த குமாஸ்தா "ஆபீஸா", அட
கடவுளே, நான் ஆபீஸில்தானே இருக்கிறேன்" என்று
கத்தினார்.

'ரீடர்ஸ் டைஜஸ்ட்'

ஆண்டார்க்கு அருகிருந்து வேண்டுவன சொன்னார் புலவரே!